மார்ச் - ஏப்ரல் 2026

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



# நம் கர்த்தரின் நினைவுகூருதல்

- அன்பின் இன்றியமையாத வாழ்கை
- இயேசு, ஜீவனுள்ள ஆண்டவர்
- அப்பமும் பாத்திரமும்
- இயேசு சிலுவையில் தொங்கினார்
- இயேசு சிலுவையில் தொங்கினார்
- கிறிஸ்துவின் மூலம் விடுதலை
- நம்முடைய குணங்களிலிருந்து புளிப்பை அகற்றுதல்
- நம்முடைய கர்த்தரின் நினைவுகூருதல்

## நம் கர்த்தரின் நினைவுகூருதல்



# ஆதியிலே

ஆண்டவரின் நினைவுகூருதலையும் சிலுவையில் அவர் செலுத்திய பலியையும் ஆண்டுதோறும் அனுசரிப்பது. தேவனின் விவரிக்க முடியாத பரிசின் மீது மீண்டும் ஒருமுறை கவனம் செலுத்த நமக்கு ஒரு சிலாக்கியத்தை அளிக்கிறது. ‘‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.’’ (யோவான் 3:16) என்பதை எண்ணி நாம் வியக்கிறோம். எல்லா மனுகுலமும் வாழ்வதற்காக, வார்த்தையானவர் தாமே தாழ்த்தி, மாம்சமாகி, சிலுவையில் மரிக்க சித்தங்கொண்டதை எண்ணியும் நாம் வியக்கிறோம். (பிலிப்பியர் 2:6-8) ‘‘அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.’’ (வெளிப்படுத்துதல் 5:12)

நமது நினைவுகூருதல் இதழ், **‘‘அன்பின் இன்றியமையாத வாழ்வு’’** என்ற பாடத்துடன் தொடங்குகிறது, இது கிறிஸ்துவின் பலியினால் வழங்கப்படும் நன்மைகளை நாம் பெற்றுக்கொள்ளும் போது, கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாகிய நாம் பகிர்ந்துகொள்ளும் ஐக்கியத்தை – கொய்னோனியாவை–மையமாகக் கொண்டுள்ளது. அடுத்து, **‘‘இயேசு ஜீவனுள்ள ஆண்டவர்’’** என்ற பாடம், இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது செய்த நான்கு அற்புதங்களையும், அவனை இயற்கை, பொல்லாத ஆவிகள், நோய் மற்றும் மரணம் ஆகியவற்றின் மீது அவருக்குள்ள அதிகாரத்தை எவ்வாறு வெளிப்படுத்தினது என்பதையும் ஆராய்கிறது.

அப்பமும் பாத்திரமும் என்ற பாடம், எகிப்தில் யோசேப்பின் வாழ்க்கையின் மூன்று கட்டங்களிலும் ஆபிரகாமுக்கு மெல்கிசேதேக்கு அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் வழங்கியதிலும் நமது கர்த்தரின் பலியின் வாழ்வின் குறிப்புகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை ஆய்வு செய்கிறது.

**‘‘சிலுவையில் இயேசு தொங்கினார்’’** என்ற பாடம், கூடார அமைப்பின் கீழ் தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் பலியிடப்பட்ட மாசற்ற ஆட்டுக்குட்டியின் பலிகளுடன் இயேசு சிலுவையில் இருந்த காலம் எவ்வாறு ஒத்துப்போனது என்பதை விளக்குகிறது. இது எலியா தீர்க்கதரிசி பாகால் ஆசாரியர்களுடன் நடத்திய மோதலையும் சிலுவையுடன் தொடர்புபடுத்துகிறது.

**‘‘கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் விடுதலை’’** என்ற பாடம் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து எபிரெயர்கள் விடுவிக்கப்பட்டது. முழு மனுக்குலமும் பாவம் மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து பெறும் மாபெரும் விடுதலையை எவ்வாறு சித்தரிக்கிறது என்பதையும், இந்த மீட்பு தேவனின் அன்பு, நீதி, ஞானம் மற்றும் வல்லமை ஆகிய பண்புகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது என்பதையும் விளக்குகிறது.

**‘‘நம் கர்த்தரின் நினைவுகூருதல்’’** என்ற பாடம், இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி இரவில் தம் சீஷர்களுக்கு வழங்கிய பல இறுதிப் போதனைகளை ஆய்வு செய்கிறது. இவை யோவான் 13 முதல் 17 வரையிலான அதிகாரங்களில் காணப்படுகின்றன.

தேவனுடைய ஆட்டுக்குட்டியாக உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற நம் கர்த்தராகிய இயேசுவின் மாபெரும் பலியை (யோவான் 1:29) நினைவு கூறவும் நம் இருதயங்களையும் மனங்களையும் நாம் ஆயத்தப்படுத்த கர்த்தருடைய கிருபையால் இந்த இதழ் உதவியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**ஜனவரி / பிப்ரவரி 2026,**
**தொகுப்பு 108, எண் 2**

**அன்பின் இன்றியமையாத வாழ்க்கை** 2
கிறிஸ்துவுடனான ஐக்கியம்
**இயேசு, ஜீவனுள்ள ஆண்டவர்** 7
இயேசுவின் அனைத்து அதிகாரமும்
**அப்பமும் பாத்திரமும்** 13
என் நினைவாக இதைச் செய்யுங்கள்
**இயேசு சிலுவையில் தொங்கினார்** 19
ஆறுமணி நேரங்கள்
**கிறிஸ்துவின் மூலம் விடுதலை** 22
மீட்பின் நினைவுகூருதல்
**நம்முடைய குணங்களிலிருந்து புளிப்பை அகற்றுதல்** 26
நினைவுகூருதல்
**நம்முடைய கர்த்தரின் நினைவுகூருதல்** 31
இறுதிப் பாடங்கள்

## கிறிஸ்துவுடனான ஐக்கியம்

# அன்பின் இன்றியமையாத வாழ்க்கை



Todd Alexander

“தேவனை ஒருவரும் ஒரு போதும் கண்டதில்லை, நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்.” (1யோவான் 4:12)

அன்றாட உணவாக இருக்கும் ஒரு அப்பம், நம் அழைப்பின் ஆழமான உண்மைகளில் ஒன்றை எவ்வாறு வெளிப்படுத்துக்கூடும்?திராட்சை ரசத்தின் பாத்திரம், நம்முடைய விசுவாசத்தின் முழு உடன்படிக்கையையும் எவ்வாறு உள்ளடக்கக்கூடும்?

வருடம் தோறும் நமது ஆண்டவரின் பலியை நினைவுகூரும் நாள் நெருங்கி வரும் வேளையில், இந்த அடையாளங்கள், நம்முடைய மேலோட்டமான சிந்தனையைத் தாண்டி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எகிப்திய அடிமைத்தனத்தில் இஸ்ரயேல் ஜனங்களின் வேதனையான அனுபவங்களில் தொடங்கிய ஒரு சரித்திரத்துடன் நம்மை இணைக்க அழைக்கின்றன.

அப்போஸ்தலனாகிய பவுல், “நாம் அனைவரும் ஒரே அப்பத்தில் பங்கு கொள்வதால் ஒரே சரீரமாக இருக்கிறோம்” என்று கற்பிப்பதன் மூலம், நம்முடைய ஐக்கியத்தின் - நம்முடைய கோயினோனியாவின் (Koinonia) இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். (1கொரிந்தியர் 10:17) இருப்பினும், இந்த ஐக்கியம் என்பது புதிய ஏற்பாட்டு கருத்தாக மட்டும் இல்லாமல் இஸ்ரயேலர்கள் நிழலான பஸ்காவை பரிசுத்தமாக கடைப்பிடிப்பதன் ஒரு நிறைவேற்றமாகவும் உள்ளது.

இந்த அன்பின் இன்றியமையாத, ஜீவனுள்ள சாராம்சத்தை அறிந்துகொள்ள, இந்த நினைவுகூருதல் அடையாளப்படுத்தும் விடுதலையை நாம் முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

இது முதற்பேறானவர்களின் சபைக்கு “ஒரு விடுதலையின் விருந்தும், கடவுளின் ஆட்டுக்குட்டியால் நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்து செல்வதை சாத்தியமாக்கிய ஒரு பண்டிகையாகும். இந்த அடையாளங்களில், தனிமையில் அல்லாமல், கிறிஸ்துவின் சரீரத்தின் பலியின் ஐக்கியத்தில் பரிபூரணமடையும் அன்பிற்கானஉண்மையான வரைபடத்தை நாம் காண்கிறோம்.”

### நிழலில் இருந்து பொருளுக்கு நிறைவேறிய பஸ்கா

நிழலான இஸ்ரயேலர்களின் அனுபவங்களில் மிகவும் ஆழமான ஒன்று பஸ்கா பண்டிகை ஆகும். இந்த விருந்து எகிப்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டதை நினைவு கூர்ந்தது, ஆனால் இன்னும் குறிப்பாக, அவர்களின்



முதற்பேறானவர்களைக் கடைசியான பேரழிவை ஏற்படுத்திய வாதையிலிருந்து தப்பிக்க வைத்த தெய்வீக “கடந்து போகுதலை” இது நினைவு கூர்ந்தது. இந்தத் தனித்துவமான நிகழ்வு ஒட்டு மொத்த தேசத்தின் விடுதலைக்கும் வினையூக்கி அமைந்தது.

புது சிருஷ்டியாகிய நமக்கோ, இந்த பண்டைய நிகழ்வுகள் ஆழ்ந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன.. ஏனென்றால் மாம்ச இஸ்ரயேலுக்கான திட்டத்தின் மகத்தான உண்மைகளை முன் மாதிரியாகவும் நிழலாட்டமாகவும் காட்டுவதற்காகவே இருந்தன என்ற “இரகசியத்தை” கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இதற்கான விளக்கத்திற்குரியத் திறவுகோலைத் தருகிறார். “நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே.... எனவே புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்” (1கொரிந்தியர் 5:7,8)

இந்த ஆதாரத்துடன் இந்த உருவாகப் படம் தெளிவாகவும் கூர்மையாகவும் மாறுகிறது. எகிப்து, “இந்த உலகத்தின் அதிபதியாகிய” சாத்தானால் பாவத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட மனுக்குல உலகத்தைக் குறிக்கிறது. பார்வோன், எதிராளியின் நிழலாகவே இருக்கிறான். அதே நேரத்தில் முனகிக்கொண்டிருக்கும் இஸ்ரயேலர்கள், பாவம் மற்றும் மரணத்தின்

ஒடுக்குமுறை அடிமைத்தனத்தில் தவிக்கும் முழு மனுக்குலத்தையும் சித்தரிக்கிறார்கள். இஸ்ரயேலர் தங்களை விடுவித்துக் கொள்ள எவ்வாறு வல்லமையற்றவர்களாக இருந்தார்களோ, அவ்வாறே மனுக்குலமும் யெகோவா தேவனின் தலையீடு இன்றி தங்கள் விலங்குகளை உடைத்தெறியும் திறன் அற்றவர்களாக இருக்கிறார்கள். இதற்கான ஒரே ஒரு நம்பிக்கை – ''நிஜமான மோசேயாகிய'' நம்முடைய கர்த்தராகிய இயேசுவிடம் – மட்டுமே உள்ளது. கடவுள் குறித்த காலத்தில் விடுதலைக்காக ஏங்கும் அனைவரையும் அவர் விடுவிப்பார்.

இருப்பினும், இந்த பரந்த காட்சியின் உள்ளே, இன்னும் தனிப்பட்ட மற்றும் குறிப்பிட்ட ஒரு சித்திரம் உள்ளது. இது மனுக்குலம் அனைத்தையும் பற்றியது அல்ல, மாறாக முதற்பேறானவர்கள் என்ற ஒரு சிறப்பான வகுப்பைப் பற்றியது ''பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாகிய'' – புதுசிருஷ்டியே அவர்களின் நிஜம் (எபிரெயர் 12:23) அந்த நிழலில், முதற்பேறானவர்கள் தங்கள் சகோதரர்களுக்கு முன்பாக ஒரு தனித்துவமான சோதனையை எதிர்கொண்டார்கள். மரணத்தை எதிர்கொண்ட அவர்கள், கதவின் நிலை கால்களிலும் மேல்நிலையிலும் பூசப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக தப்பித்து கடந்துச் சென்றார்கள்.

இந்த விடுதலையானது தலைச்சன்களைப் பிரித்து வைத்தது. மேலும் இஸ்ரயேல் தேசத்திற்குள் அவர்களுக்கு இருந்த அந்தச் சிறப்பு அந்தஸ்து லேவி கோத்திரத்திற்கு மாற்றப்பட்டது. லேவி கோத்திரம் தங்கள் சகோதரர்களுக்குப் போதகர்களாகவும், தலைவர்களாகவும் இருக்கும் பொருட்டு, பூமியிலுள்ள தங்கள் அனைத்து சுதந்திரத்தையும் விட்டுக்கொடுக்க அழைக்கப்பட்டனர்.

நிஜமான முதற்பேறானவர்களின் சபையும் அவ்வாறே இருக்கிறது. தற்போதைய இந்தத் தீய யுகத்தில், உலகத்திற்கு முன்பாக, ஜீவனுக்கோ அல்லது மரணத்திற்கோ ஆன சோதனைக்கு நாம் உட்படுத்தப்பட்டுள்ளோம். நம் மீட்பரின் இரத்தத்தின் புண்ணியத்தின் மூலமாக, நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்து செல்கிறோம். விசுவாசத்தினால், நாம் பூமியிலுள்ள பங்குகளைத் துறந்து, நம் ஜீவனையே பலி செலுத்துகிறோம். மேலும் முடிவு பரியந்தம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், ''அழிவில்லாததும், மாசற்றதும், வாடிப்போகாததுமான சுதந்தரத்தைப்'' பெறுவோம். (1பேதுரு 1:14) இந்த பயணத்தை உலகம் புரிந்து கொள்வதில்லை, ஆனால் நாம் ''கடந்து போகிறோம்,'' ஆதாமுக்குரிய மரணத்திலிருந்து மீட்கப்பட்டு இராஜரீக ஆசாரியத்துவமாக உருவாக்கப்படுகிறோம். நம்முடைய பிரதான ஆசாரியருடன் சேர்ந்து, பூமியின் அனைத்து



குடும்பங்களையும் நாம் ஆசீர்வதிப்போம். (கலாத்தியர் 3:29) இந்தக் கடந்து போகுதல் சுவிசேஷ யுகத்தின் ஆவிக்குரிய இரவு நேரத்தில் நிகழ்கிறது. இது புதிய யுகம் விடியும்போது பாவத்தின் மற்றும் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து உலகத்தை வழிநடத்த நம்மைத் தயார்படுத்துகிறது.

இந்த நிழலுடன் கச்சிதமான இணக்கத்துடன், நம்முடைய கர்த்தர் முதல் மாதத்தின் பதினான்காம் நாளில் நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியாக மரணமடைந்தார். ஆட்டுக்குட்டியானது பத்தாம் நாளில் தேர்ந்தெடுக்கப்பட்டது போலவே, நம்முடைய கர்த்தரும் பஸ்காவிற்கு ஐந்து நாட்களுக்கு முன்பு இஸ்ரயேல் தேசத்திற்கு தன்னை வெளிப்படுத்தினார். ''தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா!'' என்ற ஆரவாரத்துடன் அவர் எருசலேமுக்குள் பவனி வந்தார். (மத்தேயு21:9) நுழைந்து இஸ்ரயேல் தேசத்திடம் தம்மையே சமர்ப்பித்தார். பதினான்காம் நாள் மாலையில், அவர் ''காட்டிக்கொடுக்கப்பட்ட அதே இரவில்,'' தம் சீஷர்களுடன் பஸ்காவை அனுசரித்தார். பின்னர், அந்த உணவில் பயன்படுத்தப்பட்ட புளிப்பில்லாத அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் கொண்டு, அவர் ஒரு புதிய காரியத்தை ஏற்படுத்தினார், ஏனெனில் அந்த நிழல் நிறைவேறவிருந்தது. இது நிஜத்தின் நினைவுகூருதலாக இருக்க வேண்டும்– வந்திருக்கும் நிஜத்தைப்பற்றிய அவரது அனைத்து சீஷர்களுக்கு ஒரு பரிசுத்தமான நினைவுகூருதல்.

### பரிபூரணமாக ஆக்கப்பட்ட அன்பின் அடையாளங்கள்

நினைவுகூருதலின் அடையாளங்களில் பங்குகொள்வது என்பது வரலாற்று நினைவுகூரலைத் தாண்டியது. இது நம் பஸ்கா ஆட்டுக்குட்டியின் புண்ணியங்களை பெற்றுக்கொண்டதை அடையாளப்பூர்வமாக அங்கீகரிப்பதாகும். மேலும், நம்மை அவரோடும், அதே போல் முக்கியமாக, ஒருவரோடு ஒருவர் பிணைக்கும் உடன்படிக்கையை பக்தியுடன் புதுப்பிப்பதற்கான ஒரு வாய்ப்பாகும்.

புளிப்பில்லாத அப்பம் நமக்காக பலியிடப்பட்ட அவருடைய சரீரத்தைக் குறிக்கிறது. அதை புசிப்பது

என்பது, விசுவாசத்தின் மூலம் அவருடைய பரிபூரணமான பலியினால் ஜீவன் தரும் மதிப்பை அடையாளப்பூர்வமாகப் பெற்றுக்கொள்வதாகும். இந்த பண்டிகையை ஆசரிக்கும் போது "பழைய புளித்தாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்". (1கொரிந்தியர் 5:8) என்ற அறிவுரையும் கொடுக்கப்படுகிறது. இது பாவம், சுயநலம் மற்றும் வஞ்சகமான மனித தத்துவங்களின் தாக்கங்களை நம் இருதயங்களிலிருந்து நீக்கி சுத்திகரித்து கடவுளுடைய வார்த்தையின் பரிசுத்தமான சத்தியத்தால் நமது புதுசிருஷ்டியை வளர்க்க அழைக்கிறது.

பஸ்கா போஜனத்தில் கசப்பான கீரைகள் சேர்க்கப்பட்டிருந்தன. இது தற்போதைய வாழ்க்கையின் சோதனைகள் மற்றும் துன்பங்களுக்குப் பொருத்தமான அடையாளமாகும். இந்த கடினமான அனுபவங்கள், விரக்திக்கு வழிநடத்துவதற்குப் பதிலாக, ஆட்டுக்குட்டியின் மீதான நம் ஆவிக்குரிய பசியைத் தூண்டி, நாம் ஒரு சிறந்த தேசத்திற்கான பயணத்தில் இருக்கும் யாத்ரீகர்கள் என்பதை நமக்கு நினைவூட்ட வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இன்னும் ஆழமான அர்த்தத்தைப் பகிர்ந்து கொள்கிறார். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?" நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமாயிருக்கிறோம். (1கொரிந்தியர் 10:16,17)

இந்த பகுதியில், "பங்குபெறுதல்," என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, ஐக்கியம், கூட்டுறவு உறவாடல் ஆகியவற்றைக் குறிக்கிறது. நம்முடைய கர்த்தருடைய சரீரம் உலகத்திற்காக பிட்கப்பட்ட தனித்துவமான அப்பமாக இருந்தபோதிலும், இந்த யுகத்தில் அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள், நமக்காக இயேசு கொடுத்த பலியாகிய அந்த ஒரே அப்பத்தில் பங்குகொள்வதன் மூலம் ஒன்றாகிறார்கள்.

அந்த பாத்திரம் அவருடைய இரத்தத்தைக் குறிக்கிறது. இது நம் மன்னிப்பை உறுதிசெய்து விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட நிலையைக் கொண்டுவருகிறது. அதுவும் ஒரு "ஐக்கியம் தான்." இது கிறிஸ்துவின சரீரத்தின் ஐக்கியம் அல்லவா என்ற அப்போஸ்தலரின் கேள்வியானது, திகைப்பூட்டும் ஒரு கருத்தைக் கொண்டுள்ளது. உண்மையுள்ள "சிறு மந்தையின்" துன்பங்களும், சோதனைகளும், மரணமும் அவருடைய பலியின் ஒரு பகுதியாகக் கணக்கிடப்பட்டாலும், மீட்கும் பொருளின் ஒரு பகுதியாக கணக்கிடப்படுவதில்லை. ஆனால் எதிர்காலத்தில் உலகத்தின் பாவங்களுக்கான பாவநிவாரண பலியில் ஒரு பகுதியாக கணக்கிடப்படுகிறது. நம்முடைய ஜீவன்களை பலியாக கொடுப்பதினால், நம்முடைய தலைவரும் பிரதான ஆசாரியருமானவருடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம். இதுவே நம்முடைய கொய்னோனியாவின் (Koinonia) ஐக்கியத்தின் மையப்பகுதியாகும். இது பகிரப்பட்ட பலியின் சூளையில் பிணைக்கப்பட்ட ஒரு ஐக்கியம். இது கர்த்தருக்காகவும் அவருடைய மக்களுக்காகவும் ஊற்றப்படுவதில் அதன் வலிமையான வெளிப்பாட்டைக் கண்டடையும் ஒரு அன்பாகும்.

**நயவஞ்சகமான - நமது பொதுவான ஐக்கியத்திற்கு ஒரு அச்சுறுத்தல்:**

பஸ்கா நினைவுகூருதல் "துப்புரவு மற்றும் உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்துடன் ஆசரிக்கப்பட வேண்டுமானால், நமது ஒற்றுமையை அச்சுறுத்தும்" துர்க்குணம் மற்றும் பொல்லாப்பு என்னும் புளிப்புக்கு எதிராக நாம் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும். இந்தப் புளிப்பு பெரும்பாலும் ஆவிக்குரிய பெருமையாகவே வெளிப்படுகிறது.

அப்போஸ்தலர் ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுக்கிறார். "அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" (1கொரிந்தியர் 8:1) சகோதரர்களின் வாழ்க்கையில் ஆவியின் கனிகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதைக் கவனிப்பதை விடுத்து, அவர்களின் கோட்பாட்டு நம்பிக்கைகளின் பட்டியலைக் கொண்டு அவர்களை அளவிடுவதில் ஒரு பெரிய ஆபத்து உள்ளது. இது பரிசேயர்கள் செய்த தவறு. நியாயப்பிரமாணத்தைப் பற்றிய அவர்களது கலைக்களஞ்சியம் அறிவு, மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்கும் தண்டிப்பதற்கும் ஒரு ஆயுதமாக மாறியது. அவர்களது நிபுணத்துவம் என்பது ஒரு வெற்று ஓடு (hollow shell) போன்றது. நியாயப்பிரமாணத்தின் நிறைவேற்றம் அன்பற்ற ஒன்றாக இருந்தது.

நாம் எதையாவது அறிவோம் என்று நினைத்தால், நாம் இன்னும் அறிய வேண்டிய விதத்தில் ஒன்றும் அறியவில்லை என்ற அப்போஸ்தலரின் தாழ்மையான நினைவூட்டலை நாம் மறந்துவிடுகிறோம். (1கொரிந்தியர் 8:2) கடவுள் அங்கீகரிப்பது பிள்ளைகள் மீது நாம் காட்டும் அன்பினால் அந்த அன்பு, உறுதிப்படுத்தப்படுகிறது. இந்தப் பெருமையானது, முழு அப்பத்தையும் புளிக்க வைக்கும் நயவஞ்சகமான புளிப்பாகும். முறிக்க முடியாத அன்பில் இது பிரிவினைகளையும் பிளவுகளையும் உருவாக்குகிறது.

**இரட்டைப் பொறுப்பு: தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் ஒருமித்த ஐக்கியம்:**

இந்தக் தாழ்மையின் ஆவியே, நமது ஆவிக்குரிய வரங்கள் வளர்வதற்குத் தேவையான

வளமான நிலமாகும். அப்போஸ்தலனாகிய பவுல் ஒரு அடிப்படைத் தத்துவத்தை நிறுவுகிறார். தனிப்பட்ட வளர்ச்சி என்பது நம்முடைய சொந்த பொறுப்பாகும். 1கொரிந்தியர் 12:7-ல் ஆவியின் வெளிப்பாடு எல்லாரும் பிரயோஜனமடையும்படியாக அவனவனுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர் விளக்குகிறார். தேவன் நமக்கு பரிசுத்த ஆவியின் வரத்தை செயல்படுத்தாமல் இருப்பதற்காக, அல்ல, மாறாக ஒவ்வொரு நபராலும் அது தீவிரமாகப் பயன்படுத்தப்படுவதற்காகவே கொடுக்கிறார். தேவனுடைய சித்தத்தை பகுத்தறியும் சுய-நிர்ணய விருப்பத்தின் மூலம் அவர் நமக்கு அளித்துள்ள வரங்களை நாம் வளர்த்துக்கொள்கிறோம். நமது ஆவிக்குரிய முன்னேற்றம் என்பது செயலற்றது அல்ல. அது தீவிரமாகத் தொடர்ந்து செயல்பட வேண்டிய ஒன்றாகும். சபையின் ஏற்பாடு நமது வளர்ச்சிக்கு உகந்த நல்ல நிலமாகும். இருப்பினும், இந்தத் தனிப்பட்ட வளர்ச்சி ஒருபோதும் தனிப்பட்ட லாபத்திற்காக மட்டுமே அல்ல. எபேசியர் 4:11-13-ல் நாம் வளர்த்துக்கொண்ட வரங்களின் நோக்கத்தை பவுல் காட்டுகிறார். இந்த வரங்களை நாம் பயன்படுத்துகின்ற முதன்மையான இடங்களில் ஒன்று, கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியத்திற்குள்ளாகும். “மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்.

நாம் அனைவரும் “கிறிஸ்துவின் நிறைவின் வளர்ச்சியை அடையும் வரை ஐக்கியத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் நமது வரங்களின் நோக்கம்.” அன்பினால் சரீரத்தைக் கட்டியெழுப்புவதாகும். நமது தனிப்பட்ட வளர்ச்சி, திருச்சபையின் கூட்டு ஆரோக்கியத்துடன் பிரிக்க முடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த இரட்டைப் பொறுப்பில் தோல்வியடைவதன் விளைவு குறித்து, எபேசியர் 4:14-ல் அப்போஸ்தலனாகிய ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுக்கிறார். நமது தனிப்பட்ட வளர்ச்சியையும் சபையின் கட்டியெழுப்புதலையும் நாம் புறக்கணிக்கும்போது, நம்மை நாமே பலவீனமான நிலைக்கு ஆளாக்குகிறோம்.

நாம், “மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதமாகிய பலவிதக் காற்றுகளினாலே அலைக்கடிக்கப்பட்டு, அலைகிறவர்களாக மாறுகிறோம்.” சபையின் பலப்



படுத்தும் செல்வாக்கிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வளராத விசுவாசம், ஏமாற்று வேலைக்கு எளிதாக இரையாகிவிடும். உண்மையான ஆவிக்குரிய ஸ்திரத்தன்மை என்பது, தனிப்பட்ட விடாமுயற்சியும் மற்றும் செயல்படும் அன்பான ஐக்கியமும் ஒன்றிணையும் இடத்தில் காணப்படுகிறது.

**பலியின் இன்றியமையாத வாழ்க்கை:**

அப்படியானால், தேவனுடைய அன்பு நம்மிடம் எப்படி “பூரணப்படுகிறது”? இதற்கான விடையை அப்போஸ்தலனாகிய யோவான் வழங்குகிறார். “நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார். அவருடைய அன்பு நமக்குள் பூரணப்படும்.” (1யோவான் 4:12) தேவனுடைய அன்பு ஒரு சுருக்கமான கருத்தல்ல. அது கிறிஸ்துவின் சரீரத்தின் வழியாகப் பாயும் போது உண்மையானதாகவும், இன்றியமையாததாகவும் மாறுகிறது. விசுவாசம் கிரியைகளினால் பூரணப்படுவது போல, அன்பும் அதன் செயல்பாட்டினால் பூரணப்படுகிறது.

கர்த்தர் மீது நாம் வைத்துள்ள அன்பின் உண்மையான அளவுகோல், சகோதரர்கள் மீது நாம் வைத்துள்ள அன்பில் காணப்படுகிறது. அப்போஸ்தலனாகிய யோவான் பின்வருமாறு அறிவிக்கிறார். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (1யோவான் 3:16) இது அவருடைய மரணத்தின் நாம் கொண்டுள்ள ஐக்கியத்தின் நடைமுறை வெளிப்பாடாகும். இந்த ஜீவனைக் கொடுத்தல் என்பது பொதுவாக ஒருமுறை அல்லது நாடகத்தனமான செயல் அல்ல, மாறாக, தினசரி காரியங்களில் சின்ன சின்ன காரியங்களில் நிறைவேற்றப்படும் ஒரு தொடர்ச்சியான செயல் முறையாகும். நம்முடைய ஆண்டவர் மூன்றரை ஆண்டுகள் தன் சரீரத்தை நொருக்கி, தன் ஜீவனைக் கொடுத்து , கல்வாரி வரை அதைத் தொடர்ந்துச் செய்தாரோ, அப்படியே நாமும் செய்யவேண்டும். நமது பலி என்பது ஒரு தினசரி பயணம், ஒவ்வொரு அடியாக எடுத்து வைக்கும் ஒரு

நடையாகும்.


கர்த்தர் சபையைத் தெரிந்தெடுத்து, நமது அன்பு மற்றும் விசுவாசத்தின் அளவைச் சோதித்துப் பார்ப்பதற்கும் நிரூபிப்பதற்கும் கர்த்தர் இந்த தீமை நிறைந்த காலத்தை வடிவமைத்திருக்கிறார்.

தீமை பெருகியுள்ள இந்தக் காலத்தில் கர்த்தர் சபையைத் தேர்ந்தெடுத்திருப்பது, நமது அன்பின் அளவையும் விசுவாசத்தையும் சோதித்து நிரூபிப்பதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. நம்முடைய அன்பு வெதுவெதுப்பானதாகஇருந்தால், உலகம், மாம்சம் மற்றும் எதிராளியின் செல்வாக்கு மிகவும் சக்தி வாய்ந்ததாக நிரூபிக்கப்படலாம். அது நம்மை தேவனை விட்டு விலகிச் செல்லச் செய்யலாம். ஆனால் கர்த்தர் மீது நாம் கொண்டுள்ள அன்பு எந்த அளவிற்கு பலப்படுகிறதோ, அந்த அளவிற்கு இந்த காரியங்களை அவருக்கு பலி செலுத்துவதில் நாம் மகிழ்ச்சி அடைவோம்.

இந்த பக்தி, நம்மை நாமே கட்டுப் படுத்துவதற்கும், வீடு மற்றும் குடும்பத்தின் தேவைகளை நியாயமான எல்லைக்குள் குறைத்துக்கொள்வதற்கும் நம்மைத் தூண்டும். இதன் மூலம் நாம் கர்த்தருடைய பலிபீடத்தின் மீது அதிகமான நேரத்தையும், ஆற்றலையும் செலுத்த முடியும். மேலும், அந்தப் பலிபீடம் எங்கே இருக்கிறது. ‘‘கிறிஸ்துவினுடைய சரீரத்திற்காகவும், சபையாகிய அவருக்காகவும்’’ கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை நாம் நிறைவாக்க வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் நமக்குக் கூறுகிறார். (கொலோசியர் 1:24) சகோதரர்களுக்குச் செய்யும் ஊழியத்திற்காக நம்முடைய பலி அர்ப்பணிக்க வேண்டும். இப்படியாகவே அன்பு நம் வழியாக பாய்ந்து, சபைக்குள் அது ஒரு உறுதியான, ஜீவனைக் கொடுக்கும் வல்லமையாக மாறுகிறது.

**சபை:-யாத்திரீகர்களின் (பரதேசிகளின்) பண்டிகை**

இது, நமது கொயனோனியாவின் (ஐக்கியம்)



மிக உயர்ந்த வெளிப்பாட்டிற்கு நம்மை அழைத்துச் செல்கிறது:- ‘‘சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம். நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.’’ (எபிரெயர் 10:25) அதுதான் ஐக்கியத்தில் நாம் ஒன்றாகக் கூடிவருவது.

நாம் ஒன்றுக்கூடி வரும்போது மிகவும் அவசியமான ஒன்று நிகழ்கிறது. பஸ்கா பண்டிகையைத் தடியைக் கையில் பிடித்துக்கொண்டு, பயணத்திற்கு ஆயத்தமாக கச்சையை கட்டிக்கொண்டு உண்ண வேண்டும். இது விசுவாசக் குடும்பத்தை, பாவத்திலிருந்தும் சீர்கேட்டிலிருந்தும் விடுதலை பெற விரும்புபவர்களை இந்த உலகம் அந்நியர்களும் பரதேசிகளுமாக சித்தரிக்கிறது. நமது சபைக்கூட்டங்கள் இந்த யாத்திரிகர்களின் (பரதேசிகளின்) கூட்டங்களாகும். சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாக நாம் ஒன்றிணைந்து நிற்கும் இடமே நமது கூட்டத்தின் பரிசுத்த இடமாகும். அது நாம் பலத்தைக் கண்டடையும் கோட்டையாகவும், பரஸ்பர கட்டியெழுப்பதலைப் பெறும் பள்ளியாகவும் இருக்கிறது.

நாம் நினைவுகூருதலில் பங்குகொள்ளக் கூடி வரும்போது, கிறிஸ்துவாகிய ஒரே அப்பத்தில் பங்குகொள்கிறோம். இங்கே, கடவுளின் அன்பு என்பது இனி ஒரு தொலைதூரக் கருத்தாக இல்லை, மாறாக அது ஒரு வாழும் யதார்த்தமாக உள்ளது. அந்த சின்னங்கள் வெறும் அடையாளங்களை மீறி, நம் ஆண்டவருடனும் ஒவ்வொருவருடன் நாம் கொண்டுள்ள புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கையை அடையாளப்படுத்தப்படுகிறது. நமக்காக அவர் செய்த பலியை நாம் நினைவில் கொள்கிறோம். மேலும், அவருடைய சரீரத்திற்காக, அவரோடு சேர்ந்து நாம் தொடர்ந்து பலி செலுத்த நம்மை நாம் அர்ப்பணிக்கிறோம். இங்கு தான் நாம் அனைவரும் ஒன்றாக இணைக்கப்பட்டு, செயல்படும் பரிசுத்த ஆலயமாக, நமது கடவுளின் பிரகாசிக்கும் ‘‘அழகின் பரிபூரணமாக’’ மாறுகிறோம். (சங்கீதம் 50:2) எனவே நமது சபையை நாம் போற்றுவோம். நம் பிதா மற்றும் நம் ஆண்டவர் மீதுள்ள அன்போடு மட்டுமல்லாமல் ஒருவருக்கொருவர் ஆழமான, தாழ்மையான மற்றும்; பலியின் அன்போடு நினைவுகூருதலுக்கு வருவோம். ஏனென்றால், நம்முடைய பொதுவான ஐக்கியத்தில் நாம் பகிர்ந்துகொள்ளும் பலியில், உலகம் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்த இயேசுவின் சாயலையும் கண்ணுக்குத் தெரியாத தேவனுடைய சாயலையும் காண்கிறது.

# இயேசுவின் அனைத்து அதிகாரம்

# இயேசு, ஜீவனுள்ள ஆண்டவர்



Len Griehs

“சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,” (1கொலோசேயர் 1:19)

இயேசு நம் பரலோகத் தகப்பனுடைய குணாதிசயங்களில் முழுமையாகத் திகழுகிறார். யெகோவா தேவன் இஸ்ரயேலர்களுக்குத் தன் பிரமாணங்களை அறிமுகப்படுத்தும் பணியை தன் நண்பராகக் கருதப்பட்ட மோசேவிடம் (யாத்திராகமம் 33:11) ஒப்படைத்தாலும், “கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாகவே உண்டாயிற்று” (யோவான் 1:17) மோசே ஒரு சிறந்த தீர்க்கதரிசியாக இருந்த போதிலும், அவருக்கு எந்த தனிப்பட்ட அதிகாரமும் இல்லை, இயேசு செய்தது போல், வெறுமனே தனது பிரசன்னத்தால் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவில்லை. இயேசு கடவுளின் அதிகாரத்தால் போதித்தது மட்டுமல்லாமல், இரக்கத்தால் தூண்டப்பட்டு, நோய்களையும், வியாதிகளையும் குணப்படுத்தினார். மோசேயாலும் நியாயப்பிரமாணத்தாலும் வழங்க முடியாத ஒன்றாகிய, பாவமன்னிப்பை அவர் தனிப்பட்ட முறையில் வழங்கினார். “அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.” (மாற்கு 10:45)

இருப்பினும் இயேசு எல்லா நோய்களையும் குணப்படுத்தவில்லை. அவர் எல்லாத் துயரங்களையும் நீக்கவில்லை. அவருடைய முதல் வருகையின் போது அவர் செய்த பணி, மனுக்குலத்தின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே உள்ளடக்கியது. இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு நபருக்கும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் மூலம் பரிபூரணமான மற்றும் நித்திய ஜீவனைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கும் மீட்கும் பொருளைச் செலுத்துவதே அவருடைய முதன்மை நோக்கமாக இருந்தது.

**இயேசுவின் அற்புதங்கள்:**

இயேசு செய்த அற்புதங்கள், ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் அவர் செய்யப்போகும் பணிக்கான ஒரு முன்னோட்டமாக இருந்தது. அப்போஸ்தலர் 17:18 ஏதென்னில் எப்பிக்கூரர் மற்றும் ஸ்தோயிக்க தத்துவஞானிகளுடன் பவுல் விவாதம் செய்யும் ஒரு காட்சி விவரிக்கப்படுகிறது. “அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவருடனே வாக்குவாதம்பண்ணினார்கள். சிலர் இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர் இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

இயேசுவே தீர்க்கதரிசனங்களால் முன்னறிவிக்கப்பட்ட மேசியா (கிறிஸ்து) என்பதை இஸ்ரயேலர்களுக்கு உணர்த்துவதற்காக அப்போஸ்தலனாகிய மத்தேயு தனது நிரூபத்தை எபிரெய மொழியில் எழுதினார். இரண்டாம் நூற்றாண்டில், மத்தேயு எழுதியதை எபிரெய மொழியில் படித்தவர்கள், “தங்களால் இயன்றவரை அதை மொழிபெயர்த்தனர்” என்று பாப்பியாஸ் (Papias) குறிப்பிட்டுள்ளார். இருப்பினும், எபிரெயு மொழி பெரும்பாலான புறஜாதிகளுக்குத் தெரியாது. அவர்கள் கிரேக்க மொழியை மட்டுமே படித்தனர். மாற்கு அவர்களுக்காக, கடவுளுக்கும் மனிதனுக்கும் இயேசுவை ஒரு ஊழியக்காரராக மாற்கு வலியுறுத்தினார். அவர் பல தனிப்பட்ட அவதானிப்புகளை உள்ளடக்கி, மேசியாவாகவும் வருங்கால இராஜாவாகவும் இயேசுவின் அதிகாரத்தை



எடுத்துக்காட்டுகிறார்.

மாற்குவின் சுவிசேஷம், மனித வாழ்க்கையில் இயற்கை சக்திகள் மீது ஜீவாதிபதியாகிய இயேசுவுக்கு இருக்கும் அதிகாரத்தை வெளிப்படுத்தும் நான்கு அற்புதங்களை வலியுறுத்துகிறது.

1) இயேசு கலிலேயாக் கடலில் புனுலை அடக்கினார்.(4:35-41) - இயற்கை நிகழ்வுகள் மீது அதிகாரம்.

2) இயேசு கதராவில் ஒரு பேய் பிடித்தவனை

குணமாக்கினார். (5:1-20) அமானுஷ்ய சக்திகள் மீது அதிகாரம்.

3) இயேசு இரத்தப்போக்குள்ள பெண்ணைக் குணமாக்கினார். (5:25-34) - நோய்கள் மீது அதிகாரம்

4) இயேசு யவருவின் மகளை உயிர்ப்பித்தார். (5:35-43) – மரணத்தின் மீது அதிகாரம்.

**இயேசு கலிலேயாக் கடலில் புயலை அடக்கினார்-இயற்கை நிகழ்வுகள் மீது அதிகாரம்:**

"அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின் மேல் மோதிற்று. கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணைய வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி, போதகரே நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்றார்கள். அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி – ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். அவர்கள் மிகவும் பயந்து இவர் யாரோ? காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்." (மாற்கு 4:37-41)

மேலும் தனிமையாக இருப்பதற்கு, கலிலேயாக் கடல் வழியாகப் பயணம் செய்யுமாறு இயேசு பரிந்துரைத்தார். பயணத்தின்போது ஏற்பட்ட புயல், மலைகளால் சூழப்பட்ட கலிலேயக் கடலுக்கு ஒரு சிறப்பு புயலாக இருந்தது.பகலில் இருந்து வெப்பமான காற்று, மழைகளிலிருந்து குளிர்ந்த காற்றை பள்ளத்தாக்குகள் வழியாக ஏரியின் மீது வேகமாக வரச்செய்து, ஒரு சுழல் காற்று போன்ற செயலை உருவாக்கி, தண்ணீரைக் கொந்தளிப்பான புயலாக மாற்றியது. மாற்குவின் வார்த்தைகள் ஒரு தெளிவான காட்சியை சித்தரித்து நம்மை அந்த சம்பவத்தின் மையத்திற்கே அழைத்துச் செல்கின்றன. "அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின் மேல் மோதிற்று" (வசனம் 37) புயலை இயேசு அதட்டியதை மாற்கு விவரிக்கிறார். இயேசு அதைக் கடிந்து கொண்டார் என்றும், காற்று உடனடியாக நின்றது என்று கிரேக்க சொல் குறிக்கிறது. இயேசு அந்தக் கட்டளையைத் திரும்பவும் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. புயல் உடனடியாக நின்றது "அமைதலாயிரு, இரையாதே" (வசனம் 39) இது உண்மையில் "மவுனமாயிரு" அல்லது "வாய்மூடப்பட்டிரு"(Lenski, The Interpretation of Mark's Gospel பக்கம் 201) என்று பொருள்படும்.

இயேசு கதராவில் ஒரு பேய்பிடித்தவனை குணமாக்கினார்– இயற்கைக்கு அப்பாற்பட்ட



அதிகாரம், "பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டிக்கு வந்தார். இயேசு படகிலிருந்து இறங்கியவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான். அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டு ஓடி வந்து அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சத்தமிட்டு – "உன்னதமான தேவனுடைய குமாரனாகிய இயேசுவே உமக்கும் எனக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாத படிக்குத் தேவன் பேரில் உமக்கு ஆணையென்ற மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். அசுத்த ஆவியே இந்த மனுஷனை விட்டு வெளியே வா என்று இயேசு அவனுக்குக் கட்டளையிட்டிருந்தார். இயேசு அவனை நோக்கி– உன் பெயர் என்ன?" என்று கேட்டார். அதற்கு அவன்– "என் பெயர் லேகியோன், ஏனென்றால் நாங்கள் அநேகராயிருக்கிறோம்" என்று பதிலளித்தான். தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். அப்பொழுது அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி – பன்றிகளுக்குள் போகும்படி அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டன. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின. உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு... (மாற்கு 5:1-14)

கிரேக்க கையெழுத்துப் பிரதிகள் அந்த ஊரின் பெயரில் வேறுபடுகின்றன. கெரசேனியர் (Gerasenes), கத்ரேனியர் (Gadarenes) அல்லது கெர்கெசேனியர் (Gergesenes) மிகவும் கணிசமான சான்றுகள் கெரசேனஸை ஆதரிக்கின்றன. இது கலிலேயா

கடலுக்கு தென்கிழக்கே 20 மைல் தொலைவில் உள்ள நன்கு அறியப்பட்ட பகுதியான கெரசாவைக் குறிக்கிறது என்று சொற்பொருளின் விளக்கமாகும். இருப்பினும், கிழக்குக் கரையில் கெர்சா என்று அழைக்கப்படும். இப்போது இடிந்திருக்கும் அதே பெயரைக் கொண்ட ஒரு சிறிய நகரமும் இருந்தது. பிசாசு பிடித்தவன் அங்கே உள்ள கல்லறைகளுக்கு நடுவில் வசித்து வந்தான். சங்கிலிகளால் கூட அவனை கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவன் எப்படி ஒரு தீவிர நிலையை அடைந்தான் என்பதை விவரிக்கப் பயன்படுத்தப்படும் அபூரணமான நிலையை இது காட்டுகிறது. அவனைக் கட்டுப்படுத்துவதில் உள்ள சிரமத்தை தெளிவான சொற்கள் வலியுறுத்துகின்றன. அந்த மனிதன் தன் கால்களில் இருந்த விலங்குகளையும் தன்னைச் சுற்றியிருந்த சங்கிலிகளையும் அறுத்து எறியும் அளவுக்கு அவன் அந்த பிசாசுகள் மிகவும் வலிமையாக இருந்தது. அவனை அடக்கும் அளவுக்கு யாருக்கும் வலிமை இல்லை என்பதை அந்த உரை காட்டுகிறது. அவன் தொடர்ந்து கத்திக்கொண்டும், தன்னைத்தானே காயப்படுத்திக்கொண்டும் இருந்தான் என்பதை பதிவுகள் வெளிப்படுத்துகிறது. பயன்படுத்தப்பட்ட வினைச்சொல் ஒரு தீவிரமான வடிவமாகும். அதாவது அவன் தன்னைத்தானே துண்டு துண்டாக வெட்டிக்கொண்டிருந்தான் என்று அர்த்தப்படுத்துகிறது.

''உன்னதமான தேவனுடைய குமாரனாகிய இயேசுவே,'' என்பது இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட அறிவின் ஒரு குறிப்பிடத்தக்க அடையாளமாகும். இது மனநலம் பாதிப்பு பிரச்சனையல்ல, மாறாக பேய்த்தனமான வல்லமைகளுக்கு இயேசுவின் உண்மையான அடையாளம் தெரிந்திருந்தது என்பதைக் காட்டுகிறது. ''காலம் வருமுன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.'' (மத்தேயு 8:29) என்ற பிசாசுகளின் வார்த்தைகளை இதற்கு மேற்கோள் காட்டுகிறது. நியாயத்தீர்ப்பு வரும்வரை அவர்கள் தங்கள் சிறை இருப்பிடத்திற்குத் திரும்ப அனுப்பப்படுவோம் என்று பயந்தார்கள் (2பேதுரு 2:4, வெளிப்படுத்துதல் 20:1-3) இயேசு அவர்களைப் பன்றிகளுக்குள் நுழைய அனுமதித்தார். அதன் பிறகு அவை ஒரு குன்றின் மீது ஓடி கடலில் மூழ்கின.

''இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.'' (மாற்கு 5:15) அந்தப் பகுதி மக்கள் பிசாசு பிடித்தவனைப் பற்றி இனி பயப்படாமல், அவனை குணப்படுத்திய வல்லமையைக் கண்டு பயந்தார்கள். அவர்கள் இயேசுவின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனால், அந்த மனுஷனுக்கு காட்டப்பட்ட அன்பையும் இரக்கத்தையும் அவர்கள் கண்டுணரவில்லை. அவர்கள் இயேசுவை தங்கள் நாட்டை விட்டு வெளியேறும்படி கெஞ்சினார்கள். குணமடைந்த மனிதன் இயேசுவுடன் செல்ல வேண்டும் என்று கெஞ்சினான். அவன் தன்னை நேசிப்பதற்கு ஒருவரைக் கண்டுகொண்டான். பயப்படுவதற்கு அல்ல.

இயேசுவின் வார்த்தைகளில் ஒரு முக்கிய கொள்கையை பிரதிபலிக்கிறது. அந்த மனிதனை அங்கேயே தங்கி தனதுகதையை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார். யாராவது அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டால், அவர்கள் அதை தங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளாமல், தெய்வீக மீட்பரைப்பற்றி சாட்சியம் பகிர வேண்டும். கலிலேயக் கடலுக்குத் தென்கிழக்கே இருந்த புறஜாதியினர் மிகுதியான தெக்கப்போலி என்னும் இடத்தில் தனது கதையைப் பரப்புவதற்கு இயேசு அவனை ஊக்குவித்தார். ''நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்க்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.'' (வசனம் 19)

இரத்தப்போக்கினால் பாதிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை இயேசு குணப்படுத்தினார் (மாற்கு 5:25-34) நோய்கள் மீதான அதிகாரம்.

''அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிற பொழுது, இயேசுவைக் குறித்துப் கேள்விப்பட்டு, நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி, என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள். இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார். தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து நடுங்கி அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள். அவர் அவளைப் பார்த்து மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி, சுகமாயிரு என்றார்.''

இயேசு மத்தேயுவின் வீட்டிலிருந்து



யவீருவின் வீட்டிற்கு செல்லும் வழியில் நம்பிக்கை இழந்த ஒரு ஸ்திரீ தடுத்து நிறுத்தினாள். அவள் நோய் வாய்ப்பட்டிருந்ததால், நிதி ரீதியாக சோர்வடைந்திருந்தாள், இரத்தப்போக்கு காரணமாக சமூக ரீதியாகவும் புறக்கணிக்கப்பட்டிருந்தாள். (லேவியராகமம் 15:19-27 காண்க) அந்த ஸ்திரீயின் அனுபவத்தை விவரிப்பதில் மாற்கு மிகவும் நேர்மையாக இருக்கிறார். இவள் குணமடைவதற்காக பல மருத்துவர்களிடம் சென்றிருந்தாள். ஆனால் அவள் பல அநீதிகளை எதிர்கொண்டாள். தன் பணத்தையெல்லாம் செலவழித்தாள். அவளுடைய நிலைமை மேலும் மோசமடைந்தது. மருத்துவரான லூக்கா யாராலும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை என்று சுருக்கமாகக் குறிப்பிட்டு, விவரங்களைக் குறைவாகவோ எழுதியுள்ளார். (லூக்கா 8:43)

இந்தக் குணமாகுதலானது, உடனடியாக நடந்தது என்பதற்காக மட்டுமல்லாமல், இயேசுவின் வெளிப்படையான, உணர்வுபூர்வமான பங்களிப்பு இல்லாமலே நடந்தது என்பதற்காகவும் தனித்துவமானது. இருப்பினும், என்ன நடந்தது என்பதை அவர் உடனடியாக அறிந்துகொண்டார். அவருடைய வஸ்திரத்தில் எந்த மந்திர சக்தியும் இல்லை. (அப்போஸ்தலர் 5:14,15 மற்றும் 19:11-13) ஆனால் ஏதோ ஒரு விதத்தில், இயேசு அந்த ஸ்திரீயின் வேண்டுதலை ஏற்று, அவளுடைய விசுவாசத்தை அங்கீகரித்தார். ஒருவேளை யெகோவா தேவன் அவளைக் குணப்படுத்தியிருக்கலாம். ஜனக்கூட்டத்தால் சூழப்பட்டிருந்த இயேசு, அது முடியும் வரை எதையும் கவனிக்காமல் இருந்திருக்கலாம். எப்படியிருப்பினும், இந்தக் குணப்படுத்துதல் இயேசுவுக்குள் இருந்த வல்லமையினால் (கிரேக்க மொழியில்) நிகழ்ந்தது. "என்னைத் தொட்டது யார்?" என்ற கேள்வி, கூட்டத்தினருக்குப் பயனளிப்பதற்காக ஒரு கேள்வியாக கேட்கப்பட்டிருக்கலாம்.

"தன்னிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டதை இயேசு தம்மில் உணர்ந்து என்ற மாற்குவின் வார்த்தைகள் இயேசு வந்த அற்புதங்களால் அவருடைய உடல் வலிமை குறைந்து கொண்டிருந்தது என்பதை உணர்த்துகின்றன. மாற்கு, சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றிய தனது விவரிப்பில் (15:44) கூறுகிறார். சிலுவையில் அறையப்பட்டதைப் பற்றிய தனது பதிவில் (15:44) மாற்கு இவ்வாறு கூறுகிறார். "அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து - அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்." சிலுவையிலே இயேசுவின் தியாகம் மிகப் பெரியது, ஆனால் அவர் மனுக்குலத்தின் மீது கருணை கொண்டு, அவர்களைக் குணப்படுத்தத் தன் வல்லமையைப் பயன்படுத்தியபோது தினந்தோறும் பாடுபட்டார். உண்மையான தியாகத்தின் இந்த எடுத்துக்காட்டு. சீஷத்துவம் என்பது நம் சொந்த செலவில் அல்லது இழப்பில் பலி செலுத்த வேண்டும் என்பதை குறிக்க வேண்டும்.

அந்த ஸ்திரீக்கு இயேசு மீது இருந்த நம்பிக்கையானது, அவருடைய கவனத்தை ஈர்க்காமலேயே செயல்படத் தூண்டியது. தன்னைத் தொட்டவள் அவள் தான் என்று அடையாளப்படுத்திய பிறகு, "மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது," அதாவது அவளுடைய உடல் நோயிலிருந்து அவள் குணமாக்கப்பட்டாள் என்று இயேசு கூறினார். அடுத்ததாக, "உன் வேதனை நீங்கி, சுகமாயிரு" என்பதன் நேரடி அர்த்தம், "நன்றாக இரு, ஆரோக்கியமாக இரு" என்பதாகும். ஒருவேளை அந்தத்தருணத்தில்இருந்து அவள் இயேசுவின் சீஷராக மாறியிருக்கலாம்.

**இயேசு யவீரின் குமாரத்தியை எழுப்புகிறார் (மாற்கு 5:35-43) மரணத்தின் மீதான அதிகாரம்.**

அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து உம்முடைய குமாரத்தி மரித்துபோனாள். இனி ஏன் போதகரை வருத்தப்படுத்துகிறீர் என்றார்கள். அவர்கள் சொன்ன வார்த்தையை இயேசு கேட்டவுடனே, ஜெப ஆலயத்தலைவனை நோக்கி பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு என்று சொல்லி, பேதுருவையும், யாக்கோபையும், யாக்கோபின் சகோதரன் யோவானையும் தவிர வேறொருவரும் தம்மோடே வருகிறதற்கு இடங்கொடாமல் ஜெப ஆலயத்தலைவனுடைய வீட்டிலே வந்து சந்தடியையும் மிகவும் அழுது புலம்புகிறவர்களையும் கண்டு உள்ளே பிரவேசித்து நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்.அதற்காக அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும், தாயையும் தம்மோடே

வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு பிள்ளையிருந்த இடத்தில் பிரவேசித்து, பிள்ளையின் கையைப் பிடித்து தலீத்தாகூமி என்றார். அதற்கு சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அரத்தமாம். உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள். அவள் பன்னிரண்டு வயதுள்ளவளாயிருந்தாள். அவர்கள் மிகுந்த ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள். அதை ஒருவருக்கும் அறிவியாதபடி அவர்களுக்கு உறுதியாகக் கட்டளையிட்டு அவளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்னார்.''


இயேசு யவீருவின் வீட்டிற்கு வந்தபோது, இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் ஏற்கனவே நடந்து கொண்டிருப்பதைக் கண்டார். யூதர்கள் தங்கள் துக்கத்தை எப்போதும் அடக்கிகொள்ளமாட்டார்கள் அவர்களோடு துக்கப்படுவதற்கு கூலிக்கு ஜனங்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். துக்கப்படுபவர்களுமுன் புல்லாங்குழல் வாசிப்பவர்களையும் சேர்த்து, மிக சத்தம் போடும் ஒரு கூட்டத்தைப் பற்றி மத்தேயு (9:23) விவரிக்கிறார். அதற்கு இயேசு, "நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன?'' என்று கேட்டார். பின்னர் அவர் "பிள்ளை மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறது'' என்று கடுமையாகக் கூறினார். அவள் கோமா (Coma) நிலையில் (மயக்க நிலையில்) இருந்தாள் என்று சில விமர்சர்கள் இதற்கு அர்த்தம் சொல்லிக்கொள்கிறார்கள். இருப்பினும், லூக்கா 8:55-ல் அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது என்று கூறப்பட்டுள்ளது. ஒருவர் நித்திரையில் இருந்து மீண்டும் எழுந்திருப்பதை இங்கு ஒரு மரணம் என்று இயேசு இங்கு மரணத்தை விவரிக்கிறார். இங்கு இயேசு மரணத்தை நித்திரையில் இருந்து மீண்டும் எழும்பும் ஒரு காரியமாக விவரிக்கிறார். பின்னர், அவர் லாசருவின் நிலையை இதே போன்ற வார்த்தைகளால் விவரிக்கிறார். "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார். (யோவான் 11:11) சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாத போது, லாசரு மரித்துப்போனான்'' என்று அவர் தெளிவாக சொன்னார். (யோவான் 11:14) யூத தல் மூத்தில் மரணத்தோடு தொடர்புடைய அவள் தூங்கிய போது என்ற வார்த்தைக்கு நூற்றுக்கணக்கான குறிப்புகள் உள்ளன. நமது "கல்லறைத் தோட்டம்'' (Cemetery)என்ற வார்த்தை, லத்தீன் மொழியில்(Coemeterium) மற்றும் கிரேக்க மொழியில் (koimeterion) ஆகிய இரண்டிலிருந்தும் வந்தது. இவை இரண்டுமே தூங்குவதற்கான அறை என்று பொருள்படும். அத்துடன் தூங்க வைப்பது என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான (Koiman) என்பதிலிருந்து வந்தது.

யவீருவின் மகளுக்கோ அல்லது லாசருவுக்கோ மரணத்தின் யதார்த்தத்தை இயேசு



மறுக்கவில்லை. மரணம் என்பது நிஜமானது. மேலும் அதை அனுபவிப்பவர்களுக்கும், அவர்களை சுற்றியிருப்பவர்களுக்கும் அந்தச் செயல்முறை பெரும்பாலும் வேதனையானது, அந்தச் சிறு பெண் பரலோகத்திலிருந்தோ அல்லது வேறு எந்த நிலையிலிருந்தோ திரும்பவில்லை. மரணத்திற்குச் சமமான உறக்கம் என்பது மரணத்திற்குப் பிறகு எதிர்காலத்தில் ஒரு விழிப்பு வரும் என்பதை உணர்த்துகிறது. இந்தப் பன்னிரண்டு வயது சிறுமிக்கு மரணத்திற்குப் பிறகு விரைவில் விழிப்பு வந்தது. லாசருவுக்கு நான்கு நாட்களுக்குப் பிறகு வந்தது. மனுக்குலத்திற்கு கிறிஸ்துவினுடைய நீதியான ஆட்சியில் அனைவரும் உயிர்த்தெழுப்பப்படும் போது அது நிகழும். "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும், அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கிணையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.'' (யோவான் 5:28,29)

அந்தச் சிறுமியையும் லாசருவையும் இயேசு எழுப்பியது, அவர்களை அவர்களின் முந்தைய வாழ்க்கையின் நிலைக்குத் திரும்பக் கொண்டு வந்தது. இருவரும் தொடர்ந்து இயல்பான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். பின்னர் மீண்டும் இறந்தார்கள். ஆதாம் படைக்கப்பட்ட பிறகு பாவம் செய்யும் வரை உயிருடன் இருந்தது போல, இவர்கள் இருவரும் உண்மையாகவே உயிருடன் இருக்கவில்லை. இருப்பினும், அவருடைய கீழ்ப்படியாமை ஒரு படிப்படியான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இப்போது ஒவ்வொரு மனிதனும் பாவத்தின் விளைவுகளை அனுபவிக்கிறார்கள். மரணத்தை நோக்கிய வீழ்ச்சி. முழுமையான உயிர்த்தெழுதல் (கிரேக்க மொழியில் அனாஸ்ட்டாசிஸ் என்பது ஒவ்வொரு தனி மனிதனிடமும் உள்ள அனைத்து மன ஒழுக்க மற்றும் உடல் ரீதியான ஊழல்களையும் (குறைபாடுகளையும்) நீக்கி,



அவர்களின் மனம் மற்றும் உடல் இரண்டிலும் பரிபூரண நிலைக்கு உயர்த்துவதை உள்ளடக்கியுள்ளது.

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்." (1கொரிந்தியர் 15:20) என்று பவுல் எழுதுகிறார்." "கிறிஸ்து பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி" என்று லூக்கா அப்போஸ்தலர் 26:23யில் விவரிக்கிறார். இயேசுவின் அற்புதங்கள், மரணத்திலிருந்து உலகம் விழித்தெழும் காலத்தை முன்னறிவிக்கின்றன. அப்பொழுது அனைவருக்கும் பரிபூரணமான ஜீவனுக்கான உண்மையான வாய்ப்பு வழங்கப்படும். இந்த அறிவு, கடவுள் மீதான ஆற்றலுடனும், பக்தியுடனும் தொடர்ந்து முன்னேற நம்மைத் தூண்டட்டும், மேலும் இயேசுவின் மீட்புப் பணியின் பிரதிநிதிகளாக நமது விசுவாசத்தை மேலும் வலுப்படுத்துவோம்.

**இயேசு நாசரேத்துக்கு திரும்பினார் - மாற்கு 6:1-13**

"அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீஷரும் அவரோடே கூட வந்தார்கள். ஓய்வுநாளானபோது, ஜெப ஆலயத்தில் உபதேசம் பண்ணத்தொடங்கினார். அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? இவன் தச்சன்அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே, யூதா, சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள்." (வசனம் 1-3)

இந்த நான்கு அற்புதங்களுக்குப் பிறகு, இயேசு நாசரேத்திற்குத் திரும்பினார். அங்கே அவரை அறிந்தவர்களிடமிருந்து ஒரு சாதகமற்ற வரவேற்பை எதிர்கொண்டார். இருப்பினும் அவர்களின் பகைமையால் அவர் தளர்ச்சி அடையவில்லை. அவருடைய அற்புதங்கள் அவருடைய வல்லமையை மட்டுமல்லாமல், அவருடைய கவனிப்பையும் பரிவையும் பிரதிபலித்தது. அவர் தன் சீஷர்களை அனுப்பி, அவர்களுக்கு ஆவிகள் மீதான அதிகாரத்தையும் குணப்படுத்தும் வல்லமையையும் கொடுத்தார். அதே நேரத்தில் அவர்கள் சந்தித்தவர்கள் மீது பரிவையும் வெளிப்படுத்தினார். இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தங்கள் விசுவாசத்தை பலப்படுத்த வேண்டியிருந்தது. மரித்துக்கொண்டிருக்கும் உலகத்திற்குப் பரிவு காட்ட நாமும் அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவின் மீதான விசுவாசத்தினால நீதிமான்களாக்கப்பட்ட நாம் இப்போது ஒரு உயர் அழைப்பிற்குப் பதிலளிக்கிறோம்.

மரித்து கொண்டிருக்கும் உலகத்திற்கு இரக்கம் காட்ட நாமும் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசுவின் மீதான விசுவாசத்தால் நீதிமான்களாக்கப்பட்ட நாம், இப்போது பரம அழைப்புக்கு பாத்திரர்களாக இருக்கிறோம். (ரோமர் 5:1) நாம் நம் வாழ்க்கையைக் கடவுளுக்கு அர்ப்பணித்து, இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்ற உண்மையாக முயன்றால், நாம் ஏற்கனவே மரணத்திலிருந்து நித்திய ஜீவனுக்கு மாறிவிட்டோம். (யோவான் 5:24, 1யோவான் 3:14) நமது புதிய சுபாவம் வளர்ந்து முதலாம் உயிர்த்தெழுதலில் பரிபூரணமடையும் (வெளிப்படுத்துதல் 20:6) அவிசுவாசிகள் இயேசுவை தவறாகப் புரிந்து கொண்டது போலவே, இன்று நாமம் நம்பிக்கையற்றவர்களிடமிருந்து எதிர்ப்பைச் சந்திக்கிறோம். நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே கூடத்தேவனுக்குள் மறைந்திருக்கிறது என்று பவுல் நமக்குக் கூறுகிறார். (கொலோசேயர் 3:3)

இயேசுவைப் பற்றி நாம் வாசிக்கும் விஷயங்களால் தூண்டப்பட்டு அவரை இன்னும் நெருக்கமாகப் பின்பற்றுவோம், "இப்படி நான் (நாம்) அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கு ஒப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாவது நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலிப்பியர் 3:10,11) உயிர்த்தெழுதலுக்குத் தகுதியாகிறதற்கும்.

# என் நினைவாக இதைச் செய்யுங்கள்

## அப்பமும், பாத்திரமும்



"அன்றியும் உன்னதமான தேவனுடைய ஆசாரியயனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து." (ஆதியாகமம் 14:18)

**James Parkinson**

பழைய ஏற்பாட்டின் ஆரம்ப காலங்களிலேயே நம்முடைய கர்த்தரின் பலியின் மரணத்தின் நினைவுகூருதலுக்கான குறிப்புகள் காணப்படுகின்றன. எகிப்தை அடைந்த பிறகு யோசேப்பின் வாழ்க்கையின் மூன்று கட்டங்களில் இதைக் காணலாம். (1) யோசேப்பு எகிப்தில் அரச காவல் படையின் தலைவரான போத்திபாரின் வீட்டில் அடிமையாகத் தொடங்கினார். அங்கிருந்த காலத்தில், அவருடைய நிலை படிப்படியாக உயர்ந்தது. இந்த அதிகாரி "அவனைத் தன் வீட்டின் மேற்பார்வையாளராக நியமித்து தனக்கு உண்டான எல்லாவற்றையும் அவன் கையில் கொடுத்தார்." (ஆதியாகமம் 39:4) (2) போத்திபாரின் மனைவியால் பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டபோது, யோசேப்பு தாழ்த்தப்பட்டு இராஜாவின் (பார்வோனின்) சிறையில் அடைக்கப்பட்டார். ஆயினும் "கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும் அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை." (ஆதியாகமம் 39:23) சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பார்வோன் ஏழு நல்ல விஷயங்கள் மற்றும் ஏழு கெட்ட விஷயங்களைக் குறித்து இரண்டு கனவுகளைக் கண்டார். அவற்றிற்கு விளக்கம் அளிப்பதற்காக யோசேப்பு அழைக்கப்பட்டார். அவரும் அவற்றின் பொருளை விளக்கினார். (3) இதன் விளைவாக அவர் எகிப்து தேசத்தின் இரண்டாவது மிக உயர்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

எகிப்தில் யோசேப்பின் இந்த மூன்று நிலைகளும், இயேசுவின் வாழ்வின் மூன்று நிலைகளோடு ஒத்துப்போவதாகத் தோன்றுகிறது. (1) வார்த்தையாக (Logos) இருந்தபோது, அவர் தேவனுக்கு உண்மையுள்ள ஊழியராக இருந்தார். ("எல்லாவற்றிலும் அவருக்கு இல்லாமல் ஒன்றும் உண்டாகவில்லை" யோவான் 1:3) (2) அதன் பிறகு, அவர் தம்முடைய ஆவிக்குரிய தன்மையை விட்டுவிட்டு, மனிதனாக மாறித்தன்னைத் தாழ்த்தினார். இங்கே, அவர் மற்றவர்களின் நன்மைக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, இறுதியில் ஆதாம் மற்றும் அவனுடைய



சந்ததியினருக்காகத் தன் உயிரைக் கொடுத்தார். (3) உண்மையுள்ளவராக நிரூபித்த பிறகு, அவர் தனது தந்தையால் தெய்வீக இயல்புக்கு உயிர்த்தெழுப்பப்பட்டார். மேலும் பிரபஞ்சத்தில் இரண்டாவது உயர்ந்த பதவியைப் பெற்றார். "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத்தேயு 28:18)

யோசேப்பு சிறையில் இருந்த காலத்தில் பார்வோனுக்குக் கடுமையான வயிற்று உபாதை ஏற்பட்டிருக்கலாம். அதன் விளைவாக அவர் தன் பணியாளரான பானபாத்திரக்காரனையும், அப்பம் சுடுகிறவனையும் அரச சிறைக்கு அனுப்பியிருக்கலாம். அங்கே அவர்கள் யோசேப்பின் பொறுப்பில் வைக்கப்பட்டார்கள். ஒரு இரவு இருவருமே கனவு கண்டார்கள். பானபாத்திரன் ஒரு கனவு கண்டான். அதில் திராட்சைப்பழக்கொடி இருந்தது, அதிலிருந்து சாறு பிழிந்து கிண்ணத்தில் ஊற்றி பார்வோனிடம் கொடுப்பது போலக் கனவு கண்டான். இதற்கு மாறாக அப்பம் சுடுபவன் தன் தலையில் அப்பம் உள்ள கூடைகள் இருப்பதைக் கனவு கண்டான். அதிலிருந்து பறவைகள் சாப்பிட்டன. யோசேப்பி ஒவ்வொன்றின் அர்த்தத்தையும் விளக்கினார். மூன்றாம் நாளில் (பார்வோனின் பிறந்தநாளில்) தன் உணவில் நஞ்சு கலந்ததற்கு யார் காரணம் என்பதைக் கண்டறிந்து, பார்வோன் அப்பம் சுடுகிறவனைத் தூக்கிலிட்டான். ஆனால் பானபாத்திரனை மீண்டும் தன் உணவைச் சுவைத்துப்

பரிமாறும் பதவியில் அமர்த்தினான். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, இயேசு தம் சீஷர்களுக்கு அறிமுகப்படுத்திய நினைவுகூருதலின் அடையாளங்களை புளிப்பில்லாத அப்பமும், திராட்சை ரசமும் பயன்படுத்தப்பட்டன.

**ஆபிரகாமுக்கு அப்பமும் திராட்சை ரசமும்:**

வரலாற்றில் இன்னும் முற்பட்ட காலத்தில் சுமார் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, ‘‘அன்றியும் உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து...’’(ஆதியாகமம் 14:18) மெல்கிசேதேக்கு வழங்கிய அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் உண்பதன் மூலம் நினைவுகூருதலின் அடையாளங்கள், ஆபிரகாமின் உடன்படிக்கையுடன் இணைக்கப்படுகின்றன. இந்த உடன்படிக்கை, மெல்கிசேதேக்கின் நிஜமான மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்தில் மூலம் நிறைவேறும். அப்பமும் திராட்சை ரசமும், இயேசுவின் மரணத்தின் மூலம் வழங்கப்பட்ட அவருடைய சரீரமும் இரத்தமும், ஆபிரகாமின் உடன்படிக்கை நிறைவேற எவ்வாறு அவசியமானது என்பதைச் சித்தரித்தன. பவுலும் மெல்கிசேதேக்கை இயேசுவோடு இணைத்து ‘‘இவன் தகப்பனும், தாயும் வம்ச வரலாறும் இல்லாதவன். இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்’’ என்று கூறுகிறார்.

ஆகவே, யோசேப்பும் மெல்கிசேதேக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு நிழலாக இருக்கிறார்கள். அவர் தமது மாம்சத்தையும் இரத்தத்தையும் பலியாக ஒப்புக்கொடுத்தவர் இந்த அடையாளங்களான அப்பம் மற்றும் பாத்திரத்தால் அடையாளப்படுத்தப்படுகிறது.

புளித்த திராட்சை ரசமா அல்லது திராட்சை சாறா?

இயேசு தம்முடைய நினைவுகூருதலை புளித்த திராட்சை ரசத்தைக் கொண்டு அறிமுகப்படுத்தினாரா? அல்லது திராட்சை சாற்றைக் கொண்டு அறிமுகப்படுத்தினாரா? என்பது நீண்ட காலமாக விவாதிக்கப்படும் ஒரு கேள்வியாகும். இரு தரப்பிலும் தர்க்கரீதியான வாதங்கள் உள்ளன. புளித்த திராட்சை ரசம் (ஆல்கஹால் உள்ளது ) ஜூலை 1883 வோட்ச் டவர் (WT) இதழில் ஒரு வாதம் முன் வைக்கப்பட்டது. ‘‘யூதர்களின் பழக்க வழக்கங்களைப் பொறுத்த வரை, திராட்சை ரசத்தில் புளிப்பு தன்மை உள்ளது என்ற வாதத்தை நிரூபிப்பிதற்குப் பதிலாக அதை மறுக்கிறது. ஏனெனில், யூதர்கள் பஸ்கா பண்டிகையின் போது திராட்சை ரசத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதே சமயம் புளிப்பான அனைத்தையும் விலக்கிவிடுகிறார்கள். பாலஸ்தீனத்தில் திராட்சை அறுவடை காலம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களாகும். ஆனால் பஸ்கா பண்டிகையோ சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு வருகிறது.’’ அக்டோபர் மாதத்தில் தயாரிக்கப்பட்ட திராட்சை ரசம், ஏப்ரல் மாதத்திற்குள் இயற்கையாகவே புளித்திருக்கும். நம்முடைய கர்த்தரின் மரணத்தை நினைவு கூரும்போது, திராட்சை சுவைப்பது தங்களுக்கு ஆபத்தானது (மதுப்பழக்கம் போன்ற காரணங்களால்) என்று யாராவது கருதினால்,அதற்குப் பதிலாக உலர் திராட்சை சாற்றை பயன்படுத்துமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். இது மது கலந்த திராட்சை ரசம் இல்லையென்றாலும், நிச்சயமாக திராட்சைக் கனியின் ரசம்’’ என்பதில் சந்தேகமில்லை (பக்கம் 6) 1904-ஆம் ஆண்டு அதே ஆசிரியர் இவ்வாறு எழுதினார். ‘‘நாம் தீர்மானிக்க முடிந்த வரையில் கர்த்தர் இந்த நினைவுகூருதலைத் தொடங்கியபோது புளித்த திராட்சை ரசத்தையே பயன்படுத்தினார்.’’ இருப்பினும், ‘‘அவர் திராட்சை ரசம்’’ என்று குறிப்பிடலாம். வெறுமனே ‘‘திராட்சைக் கனியின் ரசம்’’ என்று குறிப்பிட்டதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். (அப்போஸ்தலர்களின் சமகாலத்தவரான யூத வரலாற்றாசிரியர் ஜோசபஸ், பார்வோனின் பானபாத்திரக்காரரால் ஒரு பாத்திரத்தில் புதிதாகப் பிழிந்த மூன்று திராட்சைக் கொத்துக்களை திராட்சைக் கொடியின் பழம் என்று வெளிப்படையாகக் குறிப்பிடுகிறார், என்று பச்சியோச்சி (Bacchiocchi) மேலும் குறிப்பிடுகிறார். இந்த சொற்றொடர் திராட்சையின் இனிமையான, புளிக்காத சாற்றைக் குறிக்கப்பயன்படுத்தப்பட்டது என்பதை இது சந்தேகத்திற்கு இடமின்றி நிறுவுகிறது. பக்கம் 49) மேலும், நம்முடைய காலத்தில் மதுப்பழக்கம் ஒரு தீய வல்லமையை உருவெடுத்துள்ளதைக் கருத்தில் கொண்டு, புளிக்காத திராட்சை சாறு அல்லது உலர் திராட்சை சாற்றைப் பயன்படுத்துவதில் கர்த்தருடைய அங்கீகாரம் நமக்கு உண்டு என்று நாங்கள் நம்புகிறோம்.’’ (Studies in the scriptures, Volume 6, page 476 footnote)

**திராட்சை ரசம் (புளிக்காத திராட்சை சாறு)**

ரோமில் உள்ள போண்டிஃபிகல் கிரிகோரியன் (Pontofical Gregorian) பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற முதல் கத்தோலிக்கர் அல்லாதவரான சாமுயேலி பேக்கியோச்சி, இவ்வாறு குறிப்பிடுகிறார். ‘‘ஆங்கிலத்தில்’’wine ‘‘லத்தீனில்’’ Vinum ‘‘கிரேக்கத்தில்’’ Oinos மற்றும் எபிரெய மொழியில் ‘‘Yayin’’ ஆகிய வார்த்தைகள் வரலாற்று ரீதியாக, புளித்திருந்தாலும் அல்லது புளிக்காமல் இருந்தாலும்,



திராட்சை சாற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பேக்கியோச்சி மேலும் இவ்வாறு குறிப்பிடுகிறார். "திராட்சை சாற்றைப் புளிக்காமல் பாதுகாப்பதற்கு அக்காலத்தில் குறைந்தது நான்கு முறைகள்அறியப்பட்டு பயன்படுத்தப்பட்டதை பண்டைய காலத்துச் சான்றுகள் காட்டுகின்றன. (1) சாற்றைக் கொதிக்க வைத்து பாகாக மாற்றி வைப்பது. (2) வடி கட்டுதல் மூலம் புளிக்கக்கூடிய சதைப்பகுதியை சாற்றிலிருந்து பிரித்தல். (3) திராட்சை சாற்றை சீல் வைக்கப்பட்ட ஜாடிகளில் ஊற்றி, குளிர்ந்த நீரில் மூழ்கடித்தல், (4) திராட்சை ஜாடிகளை சீல் வைப்பதற்கு முன் கந்தகப் புகையூட்டம் (Sulphur fumigation) செய்தல்" திராட்சை ரசம் புளிப்படைந்து, ஆல்கஹால் கீட்டொனாகவும் பின்னர் வினிகராகவும் ஆக்ஸிஜனேற்றம் (Oxidizes) அதாவது நொதித்தல் அடைவதற்கு முன்பு ஒரு குறப்பிட்ட நேரத்தில் நிறுத்தப்பட வேண்டும். மேலும், அவர் குறிப்பிடுகையில் புளிக்காத திராட்சை சாற்றைப் பாதுகாப்பது, சில நேரங்களில் புளித்த திராட்சை ரசத்தைப் பாதுகாப்பதை விட எளிமையானது என்று பண்டைய கால எழுத்தாளர்கள் நமக்குக் கூறுகிறார்." (பக்கம் 7)

உலகத்தின் ஜீவனுக்காக நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பலியை நினைவுகூருதலை நாம் எந்த வகையான "திராட்சைக் கனியின் ரசம்" அல்லது "பாத்திரம்" பயன்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள நம் ஒவ்வொருவரும் நம் பங்கைக் சிறந்த முறையில் செய்ய வேண்டும். ஆனால், அதே நேரத்தில் மற்றவர்கள் அந்தப் புரிதலைப் பகிர்ந்து கொள்கிறார்களா? இல்லையா? என்பதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் மீது அன்பாக இருக்க வேண்டும்.

இன்னும் முக்கியமான விஷயங்கள்

நினைவுகூருதலின் அடையாளங்களை காட்டிலும், அந்த அடையாளங்கள் சுட்டிக்காட்டும் குறிப்புகள் மிக முக்கியமானது. நம்முடைய முதன்மையான முக்கியத்துவம் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் பலியின் மீதுஇருக்க வேண்டும். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" (1கொரிந்தியர் 11:24-25) மேலும், இயேசு, "அபாத்திரமாய்ப் போஜனபானம் பண்ணுகிறவன் கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜபானம் பண்ணுகிறான்" என்று கூறினார். (கிறிஸ்துவின் சரீரமாகிய அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகளின் (1கொரிந்தியர் 11:27-30) இதன் பொருள், கர்த்தர் அழைத்த மற்ற அனைவரையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

சரீரத்தை நிதானித்து பார்ப்பதில் அப்போஸ்தலர்களும் பல பிரச்சனைகளை எதிர்கொண்டனர். தலைமை அப்போஸ்தலர்களாக இருக்க முயன்ற யாக்கோபு மற்றும் யோவானை,பேதுருவும் அவருடைய சகோதரனான அந்திரேயாவும் மன்னிக்க வேண்டியிருந்தது. இயேசுவின் கடைசி மணி நேரங்களில் அவரை மறுதலித்த பேதுருவிடம் மற்ற பத்து அப்போஸ்தலர்களும் இரக்கம் காட்ட வேண்டியிருந்தது. யோவானும், பேதுருவும் இயேசுவின் கடைசி மணி நேரங்களில் அவருக்கு அருகில் இருக்கக்கூட முயலாத மற்றவர்களைப் புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. சிலுவையில் அறையப்பட்ட பிறகு இயேசுவை நாங்கள் பார்த்தோம் என்று மற்ற பத்து அப்போஸ்தலர்கள் கூறியதை நம்பாத தோமாவின் மீது அவர்கள் பொறுமையைக் காட்ட வேண்டியிருந்தது.

நினைவுகூருதலின் அடையாளங்களை நாம் தியானிக்கும்போது, "என் சகோதரர்களில் நான் யாரை மன்னிக்க வேண்டும்?" என்ற நம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். ஒரு பலவீனமான சகோதரர் (அல்லது சகோதரி) மீது என் மனதில் கசப்பு அல்லது கோபம் இருப்பதைக் கண்டால் நான் என் இருதயத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்.

நினைவுகூருதலின் தேதிகள்:

நினைவுகூருதலின் தேதியை எப்படிக் கணக்கிடுவது? இன்று யூதர்கள் நீசான் 15ம் தேதியை பஸ்கா பண்டிகையின் முதல் நாளாக ஆசரிக்கிறார்கள். வேதாகமக் கட்டளைப்படி பஸ்கா ஆட்டுக்குட்டி நீசான் 14-ஆம் தேதி மாலையில் பலியிடப்பட வேண்டும். ஆனால், இன்று ஆட்டுக்குட்டிகளைப் பலியிடுவதற்கு எருசலேமில்



ஆலயம் இல்லை. "உன் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஸ்தானத்திலே, நீ எகிப்திலிருந்து புறப்பட்ட நேரமாகிய சாயங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிற போது பஸ்காவை அடித்து" (உபாகமம் 16:6) இயேசு தமது நினைவுகூருதலை நீசான் 14ம்நாள் மாலையில் தொடங்கினார். எனவே, நாமும் நம்முடைய கர்த்தரின் நினைவுகூருதலை நீசான் 14 ஆம் நாள் மாலையில் ஆசரிக்க வேண்டும். இன்று நாம் பயன்படுத்தும் கிரிகோரியன் நாட்காட்டியின்படி (Gregorian calendar) இது நீசான் 13 ஆம் தேதி சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு வரும் நேரத்தைக் குறிக்கும். அடுத்த மூன்று தசாப்தங்களுக்கு (30 ஆண்டுகள்) இந்தத் தேதி சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு பின்வரும் நாட்களில் அமையும்.

2026 மார்ச் 31 செவ்வாய் கிழமை
2027 ஏப்ரல் 20 செவ்வாய் கிழமை
2028 ஏப்ரல் 09 ஞாயிற்றுக் கிழமை
2029 மார்ச் 29 வியாழக்கிழமை
2030 ஏப்ரல் 16 செவ்வாய் கிழமை
2031 ஏப்ரல் 06 ஞாயிற்றுகிழமை
2032 மார்ச் 25 வியாழக்கிழமை
2033 ஏப்ரல் 12 செவ்வாய் கிழமை
2034 ஏப்ரல் 02 ஞாயிற்றுக்கிழமை
2035 ஏப்ரல் 22 ஞாயிற்றுகிழமை
2036 ஏப்ரல் 10 வியாழக்கிழமை
2037 மார்ச் 29 ஞாயிற்றுகிழமை
2038 ஏப்ரல் 18 ஞாயிற்றுகிழமை
2039 ஏப்ரல் 07 வியாழக்கிழமை
2040 மார்ச் 27 செவ்வாய் கிழமை
2041 ஏப்ரல் 14 ஞாயிற்று கிழமை
2042 ஏப்ரல் 03 செவ்வாய் கிழமை
2043 ஏப்ரல் 23 வியாழக் கிழமை
2044 ஏப்ரல்10 ஞாயிற்று கிழமை
2045 மார்ச்31 வெள்ளிக்கிழமை
2046 ஏப்ரல் 19 ஞாயிற்று கிழமை
2047 ஏப்ரல் 09 செவ்வாய் கிழமை
2048 மார்ச் 27 ஞாயிற்று கிழமை
2049 ஏப்ரல் 15 வியாழக்கிழமை

www.hebcal.com என்ற எபிரெய நாட்காட்டி வலைத்தளத்திற்குச் சென்று, "தேதி மாற்றி" "(Date Converter") என்ற பொத்தானை அழுத்துவதன் மூலம் ஒவ்வொரு தேதியையும் சரிபார்க்கலாம். வலது பக்கத்தில், நீசான் 13 மற்றும் 3760 மற்றும் விருப்பமுள்ள ஆண்டை கிரிகோரியன் நாள் காட்டியில் கூட்டவும், எடுத்துக்காட்டாக 3760+2026=5786 (தற்போதைய எபிரெய ஆண்டு)


நினைவுகூருதல் ஒருபோதும் திங்கள்,புதன் அல்லது சனிக்கிழமைகளில் வருவதில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இது நிலையான யூத நாட்காட்டியின் ஒரு மனித திறனைக் கொண்டு வடிவமைத்ததாகும். (ஹில்லெல் 11, சுமார் கி.பி 400 முதல்) இது வாராந்திர ஓய்வு நாளுக்கு அருகில் ஒரு மகா பரிசுத்த நாள் ஏற்படுவதைக் குறிக்கிறது. மேலும் சரீர செயல்பாடு தேவைப்படும் ஒருநாள் வாராந்திர ஓய்வு நாளில் வராமல் வைத்திருக்கிறது.

**நினைவுகூருதலின் அறிமுகத்தில் இயேசு காண்பிக்கும் வரிசை:**

லூக்கா வரலாற்றை "வரிசையாக" பதிவு செய்கிறார்.("வரிசையின் படி" லூக்கா 1:3) அதே நேரத்தில் மத்தேயுவும் மாற்கும் அதில் சிலவற்றை தலைப்புரீதியாக ஒழுங்கமைக்கிறார்கள். எனவே, அப்பம் மற்றும் பாத்திரத்தின் சாத்தியமான வரிசை லூக்கா 22:14-20 இல் உள்ளது.

கடைசி இராப்போஜனம் பஸ்கா உணவு அல்ல, ஏனெனில் பஸ்கா ஆட்டுக்குட்டிகளும், கடவுளின் உண்மையான ஆட்டுக்குட்டியும் இன்னும் கொல்லப்படவில்லை. அது பஸ்கா காலமாக இருந்ததினால், இதை பஸ்கா உணவு என்று சரியாக அழைக்கலாம். கூடுதலாக,இங்கே "சாப்பிடுவது" என்பது முதன்மையாக அப்பத்தைக் குறிக்கலாம்.

மத்தேயு 26:26-29 வெறுமனே அப்பத்தையும், பாத்திரத்தையும் மேலோட்டமாக இணைக்கிறது. அவர்கள் போஜனம் பண்ணுகையில் இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாக்கும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் இராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப்பானம்



பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.”

எனவே, நம் கர்த்தருடைய நினைவுகூருதலை கடைப்பிடிப்பதற்கு இரண்டு வரிசைகளும் சரியானதாக இருக்கும்.

**லூக்கா 22:15–18**

**அப்பம் –** (அடைய முடியாத?) அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன். தேவனுடைய இராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லையென்று உங்களுக்கு சொல்லுகிறான் என்று சொல்லி.

**பாத்திரம் :** அவர் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, நீங்கள் இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளுங்கள். தேவனுடைய இராஜ்யம் வருமளவும் நான் திராட்சப்பழரசத்தைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**லூக்கா 22:19–20**

**அப்பம் :** அவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி அதைப்பிட்டு அவர்களுக்குக் கொடுத்து இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

**பாத்திரம் :** போஜனம்பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன் படிக்கையாயிருக்கிறது என்றார்.

## ஆறு மணி நேரங்கள்
# இயேசு சிலுவையில் தொங்கினார்



David Rice

“ஆறாம் மணி நேர முதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்த காரம் உண்டாயிற்று” (மத்தேயு 27:45)

கல்வாரியில் இயேசுவின் மரணம் மனுக்குலத்திற்கான மீட்புக் கிரையத்தை வழங்கியது. ஆதாமின் மரண தண்டனைக்கு பதிலாக இயேசு தனது உயிரை பலி செலுத்தினார். மனுக்குலம் ஆதாமின் தண்டிக்கப்பட்ட ஜீவனை பாரம்பரியமாகப் பெற்றுள்ளதால் ஆதாமின் ஜீவனை மீட்டெடுப்பதன் மூலம், மனுக்குலமும் மீட்கப்படுகிறது.

இயேசு தனது இறுதித் துன்பங்களை அனுபவிப்பதற்காக சிலுவையில் அறையப்பட்டதும், அவரது மரணத்திற்குப் பிறகும் சிறிது நேரம் சிலுவையில் தொங்கியதும், இஸ்ரயேலர்களை நியாயப்பிரமாணத்தின் கூடுதல் சாபத்திலிருந்து விடுவித்தது. “மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.” (கலாத்தியர் 3:13)

மூன்றாம் மணி நேரத்தில் இயேசுவை சிலுவையில் அறைந்ததாகவும், ஒன்பதாம் மணி நேரத்தில் அவர் உயிர் பிரிந்ததாகவும் மாற்கு நமக்குக் கூறுகிறார் (மாற்கு 15:25,34,37) இன்றைய பொதுவான காலக்கணக்கின்படி, இந்த நேரங்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை ஆகும். அதாவது இது மொத்தம் ஆறு மணிநேர கால அளவாகும். இது 6000 ஆண்டுகாலப் பாவம் மற்றும் மரணத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுப்பதற்கே இயேசுவின் மரணம் நிகழ்ந்தது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

**அன்றாட செலுத்தப்பட்ட இரண்டு பலிகள்**


இந்த நேரங்கள் எபிரெயர்கள் நாள்தோறும் செலுத்தி வந்த இரண்டு ஆட்டுக்குட்டிகளின் பலியோடு தொடர்புடையவை. ஒன்று காலையிலும் மற்றொன்று மாலையிலும் பலியிடப்பட்டது. இங்கு சொல்லப்பட்ட இரண்டு ஆட்டுக்குட்டிகள் என்பது, இயேசுவின் சிலுவை மரணம் யூதர்கள் மற்றும் புறஜாதியினர் ஆகிய இரு பிரிவினருக்கும் மீட்பை வழங்கியதை நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுவின் மரணம் ஆதாமிற்கும் ஒட்டுமொத்த மனுக்குலத்திற்குமானது. ஆனால் அதோடு கூடுதலாக அவர் சிலுவையில் அறையப்பட்டது இஸ்ரயேலர்களை



நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்த விடுவித்தது.

இவ்விரு பலிகளைப் பற்றி நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டுள்ள வேதப்பகுதிகள் யாத்திராகமம் மற்றும் எண்ணாகமம் ஆகிய புத்தகங்களில் காணப்படுகின்றன. அவற்றில் முதலாவது யாத்திராகமம் 29:38-40ஆகும். “பலிபீடத்தின் மேல் நீ பலியிட வேண்டியது என்னவெனில், இடைவிடாமல் ஒவ்வொரு நாளிலும் ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிட வேண்டும். ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும் மற்ற ஆட்டுக்குட்டியை காலையிலும் பலியிடுவாயாக.” எபிரெய மொழியில்,“மாலை வேளையில்” என்ற சொல் “இரண்டு மாலைகளுக்கு இடையில்” என்று பொருள்படும். இதற்கான விளக்கத்தைக் குறித்து இரண்டு கருத்துக்கள் உள்ளன. ஒன்று பிற்கபல் வேளை, மற்றொன்று சூரிய அஸ்தமனத்திற்குப் பிந்தைய வேளையாகும்.

ஒவ்வொரு ஆட்டுக்குட்டியுடனும் அவர்கள் எண்ணெயுடன் கலந்த மாவு மற்றும் ஒரு இன் (hin) அளவில் நான்கில் ஒரு பங்கு திராட்சரசத்தை பானபலியாகச் செலுத்த வேண்டும். (வசனம் 40) இயேசு தனது இறுதி இராப்போஜனத்தின் போது மனுக்குலத்திற்காக வழங்கப்பட்ட தனது ஜீவனை அதாவது தனது மாம்சம் மற்றும் இரத்தத்தை-குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்திய அடையாளங்களை இந்த மாவும் திராட்சரசமும் நமக்கு நினைவூட்டுகின்றன. மாவோடு கலந்த



எண்ணெய், இயேசுவின் ஊழியத்தில் அவரோடு இருந்த பரிசுத்த ஆவியின் நிறைவான அளவை நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த இரண்டு ஆட்டுக்குட்டிகளும் இஸ்ரயேல் வரலாறு முழுவதும், நாள்தோறும் பலியிடப்பட வேண்டியிருந்தது. "உன்னுடனே பேசும்படி நான் உங்களைச் சந்திக்கும் இடமாயிருக்கிற ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலாகிய கர்த்தருடைய சந்நிதியிலே, உங்கள் தலைமுறைதோறும் செலுத்தப்பட வேண்டிய நித்திய சர்வாங்க தகனபலி இதுவே" (வசனம் 42)

இதே அறிவுறுத்தல்கள் எண்ணாகமம் 28:3,4-ல் மீண்டும் கூறப்பட்டுள்ளன. ஆனால் அங்கு ஒரு கூடுதலான நிபந்தனை உள்ளது. அந்த இரண்டு ஆட்டுக்குட்டிகளும் பழுதற்றதாக இருக்க வேண்டும் (வசனம் 3) இது பாவமில்லாத நம்முடைய ஆட்டுக்குட்டியாகிய இயேசுவிற்கு ஒரு சிறந்த அடையாளமாகும். "இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29)

**காலத்தைப் பற்றி மற்றொரு தொடர்பு:**

காலை மற்றும் மாலை வேளைகளைத் தவிர, மற்றொரு காலத்தொடர்பும் உண்டு. இயேசு சிலுவையில் இருந்த அனுபவத்தில் நண்பகல் வேளையும் (நடுப்பகல்) குறிக்கப்பட்டுள்ளது. "ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் (நம்முடைய நேரத்திற்கு-நடுப்பகல்) பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று" (மத்தேயு 27:45) பொதுவாக பகலின் பிரகாசமான பகுதியாக இருக்கும் நண்பகலில் இந்த இருள், மேசியாவின் பிரசன்னத்தால் குறிக்கப்பட்ட இஸ்ரயேலின் தயவின் உச்சத்தில், அவர்கள் இயேசுவை நிராகரித்தால் அவர்களின் ஆசீர்வாதங்கள் இருளடைந்ததைக் குறிக்கிறது.

காலை, நண்பகல் மற்றும் பிற்பகல் என்ற இதே மூன்று காலங்கள் எலியாவின் காலத்திலும், அவர் பாகாலின் ஆசாரியர்களுடன் நேர் சந்தித்த அனுபவத்திலும் காணப்படுகின்றன. பாகாலின் பூசாரிகளுக்கு எலியா விடுத்த சவால் காலையில் தொடங்கி, நண்பகல் வரை தொடர்ந்தது. அந்த நேரத்தில் எலியா அவர்களை மேலும் தூண்டிவிட்டார். (கேலி செய்தார்) இது பிற்பகல் வரை நீடித்தது. இது மிகவும் சுவாரஸ்யமானது, ஏனெனில் இந்தச் சம்பவத்தில் ஒரு காளை பலியிடப்பட்டது. ஆட்டுக்குட்டியைப் போலவே, காளையும் இயேசுவின் பலியை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

"தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காளையை அவர்கள் வாங்கி, அதை ஆயத்தம்பண்ணி பாகாலே எங்களுக்கு உத்தரவு அருளும் என்று காலை தொடங்கி மத்தியான மட்டும் கூப்பிட்டார்கள்... எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி... அவன் தியானத்தில் இருப்பான்... அலுவலாயிருப்பான்...பிரயாணம் போயிருப்பான்... தூங்கினாலும் தூங்குவான்... என்றார். மத்தியானவேளை சென்ற பின்பு அந்திப்பலி செலுத்தும் நேரமட்டாகச் சன்னதம் சொல்லிக்கொண்டார்கள்." (1இராஜாக்கள் 18:26-29)

அதன் பிறகு எலியா களத்தில் இறங்கி, இஸ்ரயேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் ஒன்றாக, 12 கற்களைக் கொண்டு ஒரு பலிபீடத்தைக் கட்டினார். பலியின் மீது நான்கு குடம் தண்ணீரை மூன்று முறை ஊற்றினார். பின்னர் தேவனிடம் ஜெபித்தார். உடனடியாக அந்தப் பலி தகனிக்கப்பட்டது. பலிபீடத்தைச் சுற்றியிருந்த அகழியில் இருந்த தண்ணீரும் வற்றிப்போய் மறைந்தது. அதைக் கண்டவுடன் ஜனங்கள் அனைவரும் ஒரு மனதாக, "யெகோவாவே தெய்வம், அவரே மெய்யான தேவன்" என்று முழக்கமிட்டனர். மேலும் பாகாலின் பிரதிநிகளை ஒழித்தனர். (1இராஜாக்கள் 18:39,40) இயேசுவின் மரணத்தைப் பொறுத்தவரை, இஸ்ரயேல்

தனது கிருபையை இழந்தாலும் கிறிஸ்துவின் மீட்பின் பலி பலருக்கு ஆசீர்வாதங்களை கொண்டுச் சென்றது. பலருக்கு விரிவடைந்து சென்றன. எலியாவின் அனுபவத்தின் தீர்க்கதரிசனப் பொருள் கிறிஸ்தவ உலகின் மீதான போப்பாட்சியின் ஆதிக்கம் முடிவுக்கு வருவதைக் குறிக்கிறது. அதன் பிறகு, இயேசுவின் ஈடு பலியினால் புதுப்பிக்கப்பட்ட ஆசீர்வாதம் மீண்டும் மலரும்.

இயேசுவின் 3½ ஆண்டு கால ஊழியத்தைத் தொடர்ந்து அவரது மரணம் நிகழ்ந்தது. மேலே குறிப்பிடப்பட்ட எலியாவின் அனுபவம், 3½ ஆண்டுகால வறட்சித் தொடர்ந்து நிகழ்ந்தது. (யாக்கோபு 5:17) இயேசு தனது ஊழியத்தின் போது இஸ்ரயேல் எங்கும் சத்திய வசனத்தையும் தெய்வீகக் கொள்கைகளையும் பேசினார். ஆனால் அக்காலத்து யூதத் தலைவர்கள் அவரை எதிர்த்தார்கள். அதேபோல போப்பாட்சியின் தீர்க்கதரிசன காலங்களில், வேத வசனங்களின் சத்தியம் போப்பாட்சியால் எதிர்க்கப்பட்டது. இந்தப்பகுதி இயேசுவின் ஊழியத்தின் நேரடி நாட்களுக்கும் திருச்சபை வரலாற்றின் சொல்லர்த்தமான ஆண்டுகளுக்கும் இடையே நேரடி தொடர்பை உருவாக்குகிறது.

**இயேசுவின் ஊழியத்தின் கால அளவு**

போப்பாட்சியால் 3½ தீர்க்கதரிச "காலங்கள்" சபை ஒடுக்கப்பட்டது போல, இயேசுவும் தனது ஊழியத்தின 3½ ஆண்டுகாலத்தின் போது யூத அதிகாரிகளால் ஒடுக்கப்பட்டார். சபையைப் பொறுத்தவரை அந்தக்காலம் 1260 ஆண்டுகளுக்குச் சமமானது. இயேசுவின் ஊழியக் காலத்தின் நாட்களை நாம் துல்லியமாகக் கணக்கிட முடியுமா?

இந்தத் தகவல் இயேசுவின் ஊழியக் காலத்தைப் பற்றிய ஒரு மிகத் துல்லியமான காலக்கணக்கீட்டை The RVIC translation, Luke 4:1, footnote 65 வழங்குகிறது. புதிய ஏற்பாட்டுப் பகுதியின் 264 ஆம் பக்கத்தில், ஒரு முழுமையான விளக்கம் உள்ளது. "இயேசு கி.பி 29 இல் ஞானஸ்நானம் பெற்றார். மேலும் கி.பி.33 ஏப்ரல் 3 அன்று மரித்தார். (ஜூலியன் கால அட்டவணை)



இது சபையின் 1260 நாட்களைத் தொடர்புப்படுத்துகிறது. இந்தக் கணக்கீடு இயேசுவின் ஞானஸ்நானம் மற்றும் வனாந்தரத்தில் அவர் கழித்த 40 நாட்கள் ஆகியவற்றை யூதப் பண்டிகைகளோடு ஒத்திசைக்கிறது. கூடாரப் பண்டிகையைத் தொடர்ந்து வரும் முதல் ஓய்வுநாளில் அவர் ஞானஸ்நானம் பெற்றிருந்தால் (அதன் மூலம் வனாந்தரத்தில் அவர் கழித்த 40 நாட்கள், அந்தப் பண்டிகை ஆசரிப்பை அவர் தவறவிடக் காரணமாய் அமையாதபடி) கி.பி 29 ஆம் ஆண்டில் அக்டோபர் 22 ஆம் தேதி (ஜூலியன் காலக்கணக்குப்படி ) அவரது ஞானஸ்நானம் நிகழ்ந்திருக்கும். இது சரியாக 1260 நாட்கள் கொண்ட ஊழியக் காலத்தை அளிக்கிறது.

இயேசு எப்போது ஞானஸ்நானம் பெற்றார் என்பதைப் புதிய ஏற்பாடு துல்லியமாகக் குறிப்பிடவில்லை. ஆனால், கூடாரப் பண்டிகையைத் தவறவிடாமல் இருப்பதற்காக, இயேசு அப்பண்டிகை முடியும் வரை காத்திருந்து,அதற்கு அடுத்த ஓய்வுநாளில் தனது ஊழியத்தைக் தொடங்கியிருப்பார் என்பது நியாயமானதாகத் தோன்றுகிறது. (யாத்திராகமம் 23:14-17) நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த அனைத்து ஆண்களும் ஆண்டுதோறும் இந்தப் பண்டிகையை ஆசரிக்க வேண்டியிருந்தது. அப்படியென்றால், இயேசுவின் ஊழியம் துல்லியமாக 1260 நாட்களைக் கொண்டதாக அமையும். இந்தக் கணக்கீட்டின் அதாவது சரியாக 1260 நாட்களின்

விவரங்கள் கீழே உள்ள பெட்டியில் உள்ளன.

## இயேசுவின் 1260 நாட்களைக் கணக்கிடுதல்

ஃபோர்மிலாப் (Fourmilab) நாட்காட்டி மாற்றும் வலைத்தளத்தில் யூத காலண்டர் பகுதிக்குச் செல்லவும் அங்கு யூத ஆண்டு 3790 இல் யூத காலண்டரின்படி கூடாரப் பண்டிகையின் எட்டாவது மற்றும் இறுதி நாளான திஷ்ரி 22 என்பது உள்ளிடவும் இது கிரிகோரியன் காலண்டரின்படி கி.பி 29 ஆம் ஆண்டாகும். அது ஒரு செவ்வாய்க்கிழமை அக்டோபர் 16 எனவே அதைத் தொடர்ந்து வரும் சனிக்கிழமை (ஓய்வு நாள்) அக்டோபர் 20 ஆகும். கி.பி 29 ஆம் ஆண்டு அக்டோபர் 20-லிருந்து (இன்று நாம் பயன்படுத்தும் கிரிகோரியன் காலண்டர் முறைப்படி) உள்ளடக்கியதாகக் கணக்கிட்டால், பின்வரும் நாட்கள் கி.பி 33 ஆம் ஆண்டு ஏப்ரல் 3ல் (யூத நாட்காட்டியின்படி நீசான் 14, வெள்ளிக்கிழமை) இயேசு சிலுவையில் அறையப்பட்டது வரையிலான நாட்களைக் குறிக்கின்றன.

கி.பி 29 அக்டோபர் – 12 நாட்கள்
கி.பி 29 நவம்பர் – 30 நாட்கள்
கி.பி 29 டிசம்பர் – 31 நாட்கள்
கி.பி 30 – 365 நாட்கள்
கி.பி 31 – 365 நாட்கள்
கி.பி 32 – 366 நாட்கள்
கி.பி 33 ஜனவரி – 31 நாட்கள்
கி.பி 33 பிப்ரவரி – 28 நாட்கள்
கி.பி 33 மார்ச் – 31 நாட்கள்
கி.பி 33 ஏப்ரல் – 1 நாள்

மேற்கூறியவற்றின் கூடுதல் = 1260 நாட்களாகும். இந்தக் கூட்டல் கணக்கிற்கு நாம் கிரிகோரியன் நாட்காட்டியைப் (Gregorian) பயன்படுத்துகிறோம். கிரிகோரியன் நாட்காட்டியானது இயேசுன் சிலுவை மரணத்தை கி.பி 33 ஏப்ரல் 1-ஆம் தேதி குறிக்கிறது.

இயேசுவின் காலத்தில் ரோமானியர்களால் பயன்படுத்தப்பட்ட ஜூலியன் நாட்காட்டி இயேசு சிவவையில் அறையப்பட்ட நாளை கி.பி 33 ஏப்ரல் 3 என குறிப்பிடுகிறது. எனவே ஏப்ரல் 3 என்ற தேதி அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் இன்றைய கிரிகோரியன் நாட்காட்டியைப் பின்னோக்கிப் பயன்படுத்தினால் இயேசுவின் இறப்பு கி.பி 33 ஏப்ரல் 1 ஆகும். எதுவாக இருந்தாலும் எபிரெய நாட்காட்டியின் படி அது நீசான் மாதம் 14 ஆம் நாள், வெள்ளிக்கிழமை ஆகும்

## மீட்பின் நினைவுகூருதல்

## கிறிஸ்துவின் மூலம் விடுதலை



Tom Ruggirello

"ஆகையால் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." (யோவான் 8:36)

இஸ்ரயேலர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் விடுவித்ததைப்போல, இது பஸ்கா பண்டிகையில் நினைவுகூரப்படும் ஒரு முக்கிய நிகழ்வாகும். அவர் இயேசு கிறிஸ்து வழியாக மனுக்குலம் முழுமைக்கும் அதைவிடப் பெரிய ஆவிக்குரிய விடுதலையை வழங்குகிறார். கடவுளின் காலங்கடந்த கொள்கைகள், பாவம் மற்றும் மரணத்திலிருந்து இறுதி விடுதலையின் உச்சத்தை அடையும். இது குமாரனால் மெய்யாகவே விடுதலையாக்கப்பட்ட ஆழமான மற்றும் மகிழ்ச்சியான உண்மையை வெளிப்படுத்துகிறது.

இஸ்ரயேலர்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் பஸ்கா பண்டிகை, அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானதை நினைவுகூரும் ஒரு காலமாகும். தங்கள் எகிப்திய எஜமானர்களுக்காக செங்கல் செய்யும்படி வற்புறுத்தப்பட்ட காரியமானது அவர்களுக்கு மிகுந்த அவமானமாக இருந்திருக்க வேண்டும். அவர்களுடைய மனித உரிமைகள் மறுக்கப்பட்டதும், அவர்கள் ஒரு தாழ்ந்த இனமாக நடத்தப்பட்டதும் அவர்களை மனிதத்தன்மையற்றவர்களாக மாற்றியது.

குறித்த நேரத்தில் தேவன் போதும் என்று சொல்லி, ஒரு மாபெரும் மீட்பரை அனுப்பினார். பத்து கடுமையான வாதைகளின் மூலம், அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று ஒடுக்கு முறையாளர்கள் தயக்கத்துடன் ஒப்புக்கொண்டனர். இஸ்ரயேலரைப் பொறுத்தவரை, பஸ்கா பண்டிகை என்பது விடுதலையின் கொண்டாட்டமாகவும் உண்மையிலேயே மகிழ்ச்சியான நிகழ்வாகவும் இருந்திருக்க வேண்டும்.

ஆண்டுதோறும் நடைறெும் அந்த ஆசரிப்பு அவர்கள் ஒன்றாக விடுதலையடைந்த பந்தத்தை நினைவுகூரவும், ஒற்றுமையை மேம்படுத்தவும் ஒரு நேரமாக இருந்தது. இது கடவுள் மீதான வழிபாட்டை ஆழமாகவும், அன்புள்ள தந்தையை வெளிப்படுத்தவும் நோக்கமாக இருந்தது. ஜனங்கள் வயதாகும்போது மிகவும் மதிப்புமிக்க விஷயங்களை நினைவூட்ட வேண்டிய தேவை அவர்களுக்கு அடிக்கடி ஏற்படுகிறது. ஏனென்றால் நேரம் அவற்றை பின்னணிக்குத் தள்ளி ஒருவரின் ஞாபகத்தை மறக்கும் வாய்ப்பைக் கொண்டுள்ளது.

**பிள்ளைகளிடம் சொல்ல வேண்டும்**

பஸ்கா பண்டிகையைக் கொண்டாடுவதற்கான மற்றொரு காரணம் கடவுளின் வழிகாட்டும் கரத்தைப் பற்றிய கதையை ஒவ்வொரு புதிய தலைமுறையினருக்கும் பகிர்ந்துகொள்ள இஸ்ரயேலர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குவதாகும்.

"அப்பொழுது உங்கள் பிள்ளைகள்-இந்த ஆராதனையின் கருத்து என்ன என்று உங்களைக் கேட்டால், இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது எகிப்திலிருந்த இஸ்ரயேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கிப் பணிந்துகொண்டார்கள்" (யாத்திராகமம் 12:26,27)

தேவன் அளித்த விடுதலையின் கதையைப் பகிர்ந்து கொள்வது பல காரணங்களுக்காக முக்கியமானது. முதலாவதாக அது தேவனுடைய நன்மைகளையும் அவர் தம் ஜனங்கள் மீது வைத்திருக்கும் அக்கறையையும் அங்கீகரித்து கனப்படுத்தப்படுகிறது. மேலும் இது இளைய தலைமுறையினருக்கு அவர்களின் சொந்த வரலாற்றையும் தேவனைப் பின்பற்றுவதால் அவர்கள் பெற்றிருக்கும் மகத்தான நன்மைகளையும் தெரியப்படுத்துகிறது. இது தேவனைத் தேடுவதன் மதிப்பை உணர்ந்து கொள்ளும் இளைஞர்களின் வாழ்வில், ஒரு நன்மையான பாதையை அமைக்க உதவுகிறது.

**நினைவுக்கூருதலின் அடிப்படையிலான கோட்பாடுகள்:**

விடுதலை இஸ்ரயேலர்களுக்கான செய்தி மட்டுமல்ல கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தேவனுடைய கரத்தைச் சிந்தித்துப்பார்க்க இன்னும் மேலான காரணத்தைக் கொண்டுள்ளனர். மரணத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் விடுதலையின் எதிர்பார்ப்பு நாம் மகிழ்ச்சியடைவதற்கும் தேவன் மற்றும் இயேசுவுக்கும் நன்றி செலுத்துவதற்கும் ஒரு காரணமாக அமைகிறது.

தேவனுடைய திட்டம் வெளிப்படும் போதும் அவருடைய பண்புகளுக்குப் பின்னால் இருக்கும் கோட்பாடுகள்-அவரை வழிநடத்தும் குணநலன்களை



நாம் காணும் போதும், அவருடைய இருதயத்தின் அதிசயம் மற்றும் அழகைக் கண்டு நாம் பிரமித்து நிற்கிறோம்.

இந்தக் கொள்கைகள் தேவனுடைய நான்கு பண்புகளில் பொதிந்துள்ளன. (சங்கீதம் 89:14,வெளிப்படுத்துதல் 4:7)

**அன்பு:**

“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” (யோவான் 3:16)

நமது ஆண்டவரின் தியாகம். கடவுள் தமது மனிதப் படைப்பின் மீது வைத்திருந்த அன்பிலிருந்து உருவானது. மனப்பூர்வமாகவும் கீழ்ப்படிதலுடனும் இருப்பவர்கள் அனைவருக்கும் நித்திய ஜீவன் என்னும் பாக்கியத்தை வழங்க வேண்டும் என்பதே அவருடைய இருதயப்பூர்வமான விருப்பமாகும்.

“எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.” (1தீமோத்தேயு 2:4) ஒரு நபர் நித்திய ஜீவனைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவராகக் கருதப்படுவதற்கு முன்னால், அது அவருடைய சொந்த தகுதியின் அடிப்படையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை தேவனுடைய ஞானம் தீர்மானிக்கிறது. நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அவர்கள் இறுதியில் குணாதிசயத்தில் பூரணத்துவத்தை அடைய வேண்டியது அவசியமாகும். மற்ற எந்த அணுகு முறையும் பாவம் அற்ற இணக்கமான மற்றும் சீரமைக்கப்ட்ட ஒரு சமுதாயத்தைப் பராமரிக்கத் தவறிவிடும். எனவே “பூரணத்துவம்” என்பது நித்திய ஜீவனைப் பெறும் அனைவரும் பூரண அன்பில் தங்களை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். இந்த உலகம் தேவனுடைய இருதயத்தைப் பிரதிபலிக்கத் தொடங்கும் போது அது எவ்வளவு வித்தியாசமானதாக இருக்கும்.

**நீதி :**

“..அழிவுள்ள வஸ்துக்களாகிய



வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து. தமது மூலமாய்த் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்.” (1பேதுரு 1:18–20)

மனுக்குலம் பூரணத்துவத்திற்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பாக, ஆதாம் வழியாக வந்த தண்டனைத்தீர்ப்பு சரிசெய்யப்பட வேண்டும். “உலகத் தோற்றத்திற்கு முன்னரே” மீட்கும் பொருள் ஏற்பாடு செய்யப்பட்டது என்பதும், பாவம் என்பதும் தேவனுக்கு எதிர்பாராத ஒன்று அல்ல என்பதை வெளிப்படுத்துகிறது. ஒரு அத்தியாவசியக் கொள்கையாக, நித்திய ஜீவன் வழங்கப்படுவதற்கு முன்பாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும். தேவனுடைய நீதி என்பது தன்னிச்சையானதாகவோ அல்லது கணிக்க முடியாததாகவோ இருந்தால் பாவம் குறித்த புரிதல் குழப்பமடையும். மேலும் பூரணத்துவத்தின் தரம் தெளிவற்றதாகிவிடும். அத்தகைய சூழலில் ஒரு பூரணமான சமுதாயம் ஒரு போதும் இயங்க முடியாது. எனவே நன்மை தீமை குறித்த துல்லியமான அறிவு மிகவும் அவசியமானது. பாவத்திலிருந்து தூய்மையாக்கப்பட்டு, நன்மையால் நிரப்பப்படும் செயல் முறையே இயேசு திறந்து வைத்திருக்கும் பாதையாகும். தேவனுடைய நீதி தெளிவானதாகவும், மாறாததாகவும் வெளிப்படுத்தப்படும். மேலும் நீதி என்பது உலகளாவியதாக மாறும்.

“நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்.பொய் என்னும் அடைக்கலத்தைக் கல் மழை அழித்துவிடும். மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டு போகும்.” (ஏசாயா 28:17) அப்பொழுது

ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்.'' (செப்பனியா 3:9)

**ஞானம்:**

''பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது''. (யாக்கோபு 3:17)

ஆதாம் வழியாக மனித இனத்திற்குள் பாவம் நுழைவதைத் தடுப்பதற்குப் பதிலாக, அந்த அனுபவமே மனிதர்களுக்கு அதிக நன்மையைத் தரும் என்று தேவன் தீர்மானித்தார். தவறுகள், தவறான முடிவுகள் மற்றும் தனிப்பட்ட வேதனைகள்ஆகியவற்றின் வழியாக, தெய்வீகக் கொள்கைகளுக்கு உண்மையாக இருப்பதன் மூலமாக கிடைக்கும் எண்ணற்ற ஆசீர்வாதங்களை மனுக்குலம் கற்றுக்கொள்ளும் யாக்கோபு விவரித்த ஞஸனத்தின் கூறுகள். இந்தச் சுவிசேஷ யுகத்தில் பரிசுத்தவான்களுக்கு உள்ளது போலவே, ஒவ்வொருவருடைய இருதயத்திற்கும் அடிப்படை கட்டுமானக் கற்களாக அமையும். வாழ்க்கை எவ்வளவு கடினமாக இருந்தாலும், அந்த அனுபவம் தேவனுடைய இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கு ஒரு அர்த்தமுள்ள வேறுப்பாட்டை வழங்கும். ''ஞானமானது அதன் பிள்ளைகளெல்லாராலும் நீதியுள்ளதென்று ஒப்புக்கொள்ளப்படும் என்று கர்த்தர் கூறிய உண்மையை ஜனங்கள் இறுதியாக அப்போது உணர்ந்து கொள்வார்கள். (லூக்கா 7:35)

பொதுவாக ஞானம் என்பதற்கான வரை விலக்கம் யாதெனில் ''அறிவு, அனுபவம் மற்றும் புரிதலின் அடிப்படையில் சரியான தீர்ப்புகளையும் முடிவுகளையும் எடுக்கும் திறன் என்பதாகும். இது வெறும் உண்மைகளைச் சேகரிப்பது மட்டுமல்லாமல், அந்த அறிவை பல்வேறு சூழ்நிலைகளில் திறம்பட பயன்படுத்தவதற்கான நுண்ணறிவையும் உள்ளடக்கியது.'' வாழ்க்கையின் நோக்கத்தை சாலொமோன் இவ்வாறு விவரிக்கிறார். ''இவைகளால் ஞானத்தையும், போதகத்தையும் அறிந்து புத்திமதிகளை உணர்ந்து, விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப்பற்றிய உபதேசத்தை அடையலாம். இவைகள் பேதைகளுக்கு வினாவையும் வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும் புத்திமான் இவைகளைக் கேட்டு அறிவில் தேறுவான். விவேகி நல்லாலோசனைகளை அடைவான்.'' (நீதிமொழிகள் 1:2-5)

தெய்வீகத் திட்டத்தின் மூலம் ஞானம் வேரூன்றுவதற்கான அடித்தளத்தை தேவன் அமைத்து வருகிறார். ஒரு நாள் மனிதன் பிரசங்கி 2:13ன் வார்த்தைகளைப் பிரதிபலிப்பான். ''இருளைப்பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப்பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்.'' நீங்கள் ஒரு உலகளாவிய உண்மையை அங்கே புரிந்து கொண்டீர்கள். இருள் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை மறைப்பது மட்டுமல்லாமல், அது நம் பார்வையைச் சிதைத்து, ஒவ்வொரு நிழலையும் அச்சுறுத்தலாகக் காட்டுகிறது. ஞானம் ஒரு கலங்கரை விளக்கமாகச் செயல்படுகிறது. அது தடைகளை அகற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால் நீங்கள் அவற்றில் கால் விரலைக் குத்தாமல் பார்த்துக் கொள்கிறது. இருளில் வாழ்வது பயத்திற்கும் நம்பிக்கையின்மைக்கும் வழிவகுக்கிறது. இருப்பினும், ஞானம் ஒளியை உருவாக்குகிறது. அது முடிவெடுப்பதற்குக் கைக்கொடுப்பதுடன், வாழ்க்கையின் எந்தப் பாதை அதிக ஆசீர்வாதங்களைத் தரும் என்பதைக் காணவும் ஒருவருக்கு உதவுகிறது.

**வல்லமை:**

''அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.'' (மத்தேயு 28:18)

மனுக்குலத்தை மீட்டெடுப்பது ஒரு கடினமான மற்றும் சிக்கலான பணியாகும். தெய்வீக அதிகாரமும் வல்லமையும் இன்றி தெய்வீகத் திட்டம் அதனை ஒருபோதும் நிஜமாக்க முடியாது. பாவநிவாரண பலியை வழங்கி, தெய்வீக சுபாவத்திற்குரிய அழியாமையோடு உயிர்த்தெழுந்த நம்முடைய கர்த்தர், இப்போது பாவத்திலிருந்து மனிதனை மீட்டெடுப்பதற்கான அதிகாரத்தையும் வல்லமையையும் கொண்டுள்ளார். கடவுள் நம் இனத்திற்காகக் கட்டளையிட்டதைத் தடுக்கவோ அல்லது தாமதப்படுத்தவோ எந்த ஒரு எதிர்ப்பு சக்தியாலும் முடியாது. அவருடைய திட்டம் ஒரு நாள் எல்லா வகையான ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலையைக் கொண்டுவரும்.

**விடுதலையின் பொருள்:**

குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். (யோவான் 8:36)

சுதந்திரம் என்பது ஒருவருக்குப் பிடித்த எதையும் செய்யும் உரிமை அல்ல. உண்மையான சுதந்திரம் என்பது மற்றவர்களுக்கு நன்மைகளைச் செய்வதற்கும், நீதியான தரங்களின்படி வாழ்வதற்கும் மட்டுமே உட்பட்டது. பண்டைய இஸ்ரயேலில் ஜனங்கள் மனப்பூர்வமாக தங்கள் காணிக்கைகளைக்



கொண்டுவருவதற்கான வாய்ப்பை தேவன் வழங்கினார். ஜனங்களின் சர்வாங்க தகனபலி பிரமாணத்தின்படி (லேவியராகமம்) ஒரு புறா குஞ்சு, ஒரு வெள்ளாடு, ஒரு ஆட்டுக்கடா அல்லது ஒரு காளையைக் கூடக் கொண்டுவர தனிநபர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

இவை ஒருவருடைய வசதி மற்றும் மதிப்பீட்டின் நிலைக்கு ஏற்ப மாறுபட்டன. ஆனால் எந்தக் காணிக்கை செலுத்தப்பட்டாலும் அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான பலியாகக் கருதப்பட்டது. தேவனைப் பிரியப்படுத்தியது பலியின் அளவோ அல்லது அதன் மதிப்போ அல்ல, மாறாக அது மனப்பூர்வமாக (சுதந்திரமாக) ஒப்புக்கொடுக்கப்பட்டது என்பதே ஆகும். இந்தக் கோட்பாடே தெய்வீகத் திட்டத்தின் மையப்பகுதியாக உள்ளது.

தேவனுக்குக் கீழ்ப்படிவதும் பக்தி செலுத்துவதும் தங்களுக்குரிய எந்த நன்மையானவற்றையும் அல்லது மதிப்புமிக்கவற்றையம் பறித்துவிடாது என்பதை ஒரு நாள் மனுக்குலம் பிரிந்து கொள்ளும். மாறாக, அதற்கு நேர்மாறானதே உண்மையாகும். தேவபக்தியானது இருதயம் நீதியான முறையில் விரும்பக்கூடிய ஒவ்வொரு ஆசீர்வாதமும் நிறைந்த ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது. இது யாக்கோபு 1:17வில் எதிரொலிக்கிறது. "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." கீழ்ப்படிகிற பிள்ளைகளை ஆசீர்வதிப்பது எப்போதும் தேவனுடைய இருதயத்தின் விருப்பமாக இருக்கும்.

இயேசு முன் மாதிரியாகக் காட்டிய பக்தியில் மனுக்குலம் கவனம் செலுத்தும் போது, உண்மையான விடுதலையின் பொருளை அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஒரு காலத்தில் இந்த உலகத்தை அடிமைப்படுத்திய பல சுமைகளிலிருந்து விடுதலையாவதற்கு, தேவனுடைய திட்டத்தின் நோக்கம் ஒரு நாள் வழிவகுக்கும்.

அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயஸதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. (ரோமர் 8:20,21)

இந்த வரலாற்று பகுதி மாதிரியை (பஸ்கா) அதன் ஆவிக்குரிய மாதிரியை (இயேசு கிறிஸ்து) அழகாக இணைக்கிறது. இது நமது நிரந்தர சுதந்திரம் கட்டமைக்கப்பட்ட கடவுளின் நான்கு குணாதிசயத்தின் அடித்தளமாகும் என்பதைக் காட்டுகிறது.

இஸ்ரயேலரின் பஸ்கா பண்டிகையின் எதிரொலிகள், அவர்கள் பூமிக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவதை வல்லமையுடன் நினைவுபடுத்துகின்றன. அவை இயேசு கிறிஸ்துவின்மூலம் வழங்கப்படும் ஆவிக்குரிய விடுதலையில் தங்களின் உச்சக்கட்ட நிறைவேற்றத்தைக் காண்கின்றன. இது ஒரு தற்காலிகமான சுதுந்திரம் அல்ல, மாறாக தேவனுடைய பண்புகளாகிய அவருடைய பரிபூரண அன்பு, மாறாத நீதி, முடிவில்லாத ஞானம் மற்றும் யாராலும் தடுக்க முடியாத வல்லமை ஆகியவற்றில் நிலைநாட்டப்பட்ட ஒரு ஆழமான விடுதலையாகும். இது உங்கள் சிந்தனைக்கு ஒரு கலக்கமூட்டும் முடிவாக இருக்கலாம். இது அதிகாரத்தை ஆதிக்கம் செலுத்தும் அல்லது ஆடுபடுத்தும் திறன் என்று சொல்லப்படாமல் நன்மையை தேர்ந்தெடுப்பதற்கான தார்மீக வலிமையாக வரையறுக்கிறது. இது "அனைத்தையும் மறுசீரமைப்பை" நோக்கிச் செல்கிறது. அங்கு முழுசிருஷ்டிப்பும் அதன் ஒழுங்கில் மீண்டும் அதன் இணைக்கத்தைக் காணும்.

கிறிஸ்து வரையறுத்துள்ளபடி, உண்மையான சுதந்திரம் என்பது நாம் விரும்புவதைச் செய்யும் உரிமை அல்ல, மாறாக சரியானது, நல்லது மற்றும் உண்மையானதைச் செய்வதற்கான மகிமையான வல்லமையாகும். அவர் திறந்து வைத்திருக்கும் பாதையை ஏற்றுக்கொள்வதன் மூலம், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும் பயத்திலிருந்தும் நாம் வெளியேறி, மகிழ்ச்சியான நோக்கமுள்ள வாழ்க்கைக்குள் நுழைவோம். மேலும் ஒரு நாள் படைப்பனைத்தும் "தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்ளும் என்ற அந்த இறுதியான நம்பிக்கையில் உறுதியாக இருக்கிறோம்."

# நினைவுகூருதல்



## நம்முடைய குணங்களிலிருந்து புளிப்பை அகற்றுதல்

“புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்கக்கடவீர்கள். முதலாம் நாளில் தானே புளித்தமாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்க வேண்டும். முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள் வரைக்கும் புளித்த அப்பம் புசிக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரயேலரிலிருந்து அறுப்புண்டு போவான்” (யாத்திராகமம் 12:15)

பஸ்கா பண்டிகையின் போது, இஸ்ரயேலர்கள் ஏழு நாட்கள் புளிப்பில்லாத அப்பத்தைச் சாப்பிட வேண்டும் என்றும், தங்கள் வீடுகளிலிருந்து புளிப்பை நீக்க வேண்டும் என்றும் தேவன் கட்டளையிட்டார். அவர்கள் ஏன் இதைச் செய்ய வேண்டியிருந்தது? வேதத்தில் புளிப்பு பாவத்தைக் குறிக்கிறது. எனவே, அதை நீக்குவது பாவத்தை நீக்குவதைக் குறிக்கிறது. பஸ்கா பண்டிகைக்கு முன்பாக ஏன் புளிப்பை நீக்கப்பட வேண்டும் என்பதையும் புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள புளிப்பு வகைகள் மற்றும் நம்முடைய சுபாவத்திலிருந்து நாம் ஏன் புளிப்பை அகற்ற வேண்டும் என்பதைப் பற்றியும் நாம் ஆராய்வோம்.

அதோடு, பிறருடனான நமது பழக்கவழக்கங்கள் நமக்கு வரும் சோதனைகள் மற்றும் நமது குணங்களின் வளர்ச்சியின் போது தேவபக்தியுள்ள நடத்தை நமக்கு எவ்வளவு அவசியம் என்பதையும் நாம் ஆராய்வோம்.

பஸ்காவை நினைவுக்கூரும் ஒரு நியமமாக ஆசரிப்பதைக் குறித்தும், அவர்கள் எந்த வகையான அப்பத்தைச் சாப்பிட வேண்டும் என்பதைக் குறித்தும் யாத்திராகமம் 12:14-15-ல் விளக்கப்பட்டிருக்கிறது. “அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது. அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக. அதை உங்கள் தலைமுறைதோறும் நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள், புளிப்பில்லா அப்பத்தை ஏழு நாளளவும் புசிக்கக்கடவீர்கள். முதலாம் நாளில்தானே புளித்தாவை உங்கள் வீடுகளிலிருந்து நீக்க வேண்டும். முதலாம் நாள் தொடங்கி ஏழாம் நாள்வரைக்கும் புளித்த அப்பம் புளக்கிறவன் எவனோ அந்த ஆத்துமா இஸ்ரயேலரிலிருந்து அறுப்புண்டு போவான்.

பின்னர் உபாகமம் 16:3 பஸ்கா பலியுடன் புளிப்பில்லாத அப்பத்தை ஏன் சாப்பிட வேண்டும் என்பதை விளக்குகிறது. நீ எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாளை நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் நினைக்கும்படி பஸ்கா பலியுடனே புளிப்புள்ள அப்பம் புசியாமல், சிறுமையின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை ஏழுநாள் வரைக்கும் புசிக்கக்கடவாய், நீ தீவிரமாய் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபடியினால் இப்படிச் செய்ய வேண்டும். இஸ்ரயேலர்கள் எகிப்திலிருந்து தப்பிச் சென்றபோது அவர்கள் மிகவும் அவசரமாகப் புறப்பட்டதால், அப்பம் எழும்பி வருவதற்கு (புளிப்பதற்கு) அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. எகிப்தை விட்டு வெளியேறத் தயாராக இருக்கும்படி அவர்கள் பஸ்கா உணவை மிகுந்த அவசரமாக புசித்தார்கள். எகிப்திலிருந்து தப்பி வந்த அந்த விடுதலையை அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர்கள் நினைவுகூர்ந்த போது, இஸ்ரயேலர்கள் தங்கள் வீடுகளிலிருந்து அனைத்து புளிப்புள்ள மாவையும் நீக்கி, புள்ளிப்பில்லாத அப்பத்தைச் சாப்பிட வேண்டியிருந்தது. இது அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறிய நேரத்தையும், அங்கு அவர்கள் அனுபவித்த உபத்திரவங்களையும் (சிறுமையையும்)



நினைவுகூரும் விதமாகச் செய்யப்பட்டது.

புளிப்பு என்பது பாவத்தைக் குறிப்பதால், அதை அகற்றுவது என்பது நமது வாழ்க்கையிலிருந்து பாவத்தை அகற்ற வேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறது. பல வகையான புளிப்புகளைப்பற்றி புதிய ஏற்பாடு விவாதிக்கிறது. லூக்கா 12:1-ல் பரிசேயருடைய புளிப்பைக் குறித்தும், மத்தேயு 16:11-12-ல் சதுசேயருடைய புளிப்பைக் குறித்தும், மாற்கு 8:15ல் ஏரோதின் புளிப்பைக் குறித்தும இயேசு குறிப்பிடுகிறார். 1கொரி 5ம் அதிகாரத்தில், ஒரு சிறிய புளிப்பு எவ்வாறு பிசைந்த மாவு முழுவதையும் புளிப்பாக்குகிறது என்பதையும், நாம் ஏன் பழைய புளிப்பை அகற்ற வேண்டும்



என்பதையும் பவுல் விவரிக்கிறார். இயேசுவும் பவுலும் குறிப்பிட்ட புளிப்பின் வகைகளைப் பற்றி நாம் இப்போது விரிவாகக் காண்போம்.

**பரிசேயர்களின் புளித்தமா:**

“அத்தருணத்திலே அநேகமாயிரம் ஜனங்கள் ஒருவரையொருவர் மதிக்கத்தக்கதாகக் கூடி வந்திருக்கையில் அவர் முதலாவது தம்முடைய சீஷரை நோக்கி நீங்கள் மாயமாகிய பரிசேயருடைய புளித்தமாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை. ஆதலால் நீங்கள் இருளிலே பேசினது எதுவோ,அது வெளிச்சத்திலே கேட்கப்படும், நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின் மேல் கூறப்படும் என்று இயேசு லூக்கா 12:1-3 ல் கூறுகிறார். பரிசேயர்களிடம் பாசாங்குத்தனம் (மாயமாலம்) என்ற புளிப்பு இருப்பதாக இயேசு அடையாளம் காட்டினார்

மாய்மாலக்காரர் என்றும் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் ஆரம்ப அர்த்தம் பதில் சொல்பவர், பின்னர் அது நாடக நடிப்பு போன்ற ஒரு பாத்திரத்தை வகிப்பதோடு தொடர்புடையது. ஒருபோதும் உண்மையானவராக இருக்க முடியாது. அவர் எப்போதும் நடிப்பவராக இருப்பார். மாய்மாலத்தின் அடிப்படை உண்மையற்ற தன்மையாகும். அதாவது ஒரு நபர் தன்னை நல்லவராக காண்பித்து கொள்ள நடிப்பவராக இருப்பார். இன்றைய நமது புரிதலில் ஒரு மாய்மாலக்காரன் என்பவர் ஒன்று பேசுவார், ஆனால் உண்மையில் அதற்கு நேர் மாறாகச் செயல்படுவார். பரிசேயர்கள் சுயநீதி உள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் பொதுவெளியில் தங்களை நீதிமான்களாகப் பறைசாற்றிக்கொண்டார்கள். மற்றவர்கள் பார்க்கும்படி பகிரங்கமாக ஜெபம் செய்தார்கள். மேலும் தாங்கள் தேவாலயத்திற்கு வழங்கும் காணிக்கைகளை அனைவரும் பார்க்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தருடைய சேவையில் நாம் செய்த காரியங்களைக் குறித்துப் பெருமை பாராட்டாமல் இருப்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மாறாக இது தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு கடமை என்பதை உணர வேண்டும். லூக்கா 12:2,3 வசனங்களில், இரகசியமாகப் பேசப்பட்டவையும் மறைத்து வைக்கப்பட்டவை எனத் தோன்றுபவையும் அனைவருக்கும் வெளிப்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் கவனிக்கத்தக்கது. இயேசு பரிசேயர்கள் இரகசியமாகச் செய்ய முயன்றவற்றை வெளிப்படுத்தியதுடன், அவர்கள் உண்மையில் யார் என்பதையும் அம்பலப்படுத்தினார். இன்றும் இந்த வேத வசனங்கள் மிகவும் பொருத்தமானவையாக இருக்கின்றன. மின்னஞ்சல் தொடர்புகளை ஊடுருவுதல், தனிப்பட்ட முறையில் பேசப்பட்ட விஷயங்களை இணையத்திலும் செய்திகளிலும் பகிரங்கப்படுத்துதல் போன்ற தீய செயல்களால், இன்று எதையும் இரகசியமாக வைத்திருப்பது கடினமாகி வருகிறது. இரகசியக் கூட்டங்கள் கசிந்து, அதகாரத்தில் இருப்பவர்களின் சட்டவிரோதச் செயல்கள் பகிரங்கமாக அம்பலப்படுத்தப்படுவதை இன்று நாம் அடிக்கடி காண்கிறோம்.

இது இயேசு சொன்ன மறைபொருளுமில்லை, அறியப்படாத இரகசியமுமில்லை என்ற வார்த்தைகளை மெய்ப்பிக்கிறது.

**சதுசேயரின் புளித்தமா:**

மத்தேயு 16:11,12-வில் இயேசு தம்முடைய சீஷர்களுக்குப் பதிலளிக்கும் போது, “பரிசேயர்கள் மற்றும் சதுசேயர்களின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்” என்று கூறினார். அப்பொழுதுதான், அவர் அப்பத்தின் புளித்தமாவைக் குறித்து அல்ல. பரிசேயர் மற்றும் சதுசேயர்களுடைய உபதேசத்தைக் குறித்தே எச்சரிக்கையாயிருக்கச் சொன்னார் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார். “உதயமாகிறபோது, செவ்வானமும் மந்தாரமுமாயிருக்கிறது. அதினால் இன்றைக்குக் காற்றும், மழையும் உண்டாகும் என்று சொல்லுகிறீர்கள் மாயக்காரரே வானத்தின் தோற்றத்தை நிதானிக்க உங்களுக்குத் தெரியுமே. காலங்களில் அடையாளங்களை நிதானிக்க உங்களால் கூடாதா?” (வசனம் 3) என்று இயேசு அவர்களிடம் கேட்டு அவர்களின் அறியாமையை வெளிப்படுத்தினார். சதுசேயர்களைப் பற்றிய உங்கள் விளக்கம் மிகவும் துல்லியமானது, அவர்கள் உயிர்த்தெழுதலை நம்பாதது மட்டுமல்லாமல் தேவனுடைய மற்ற வாக்குத்தத்தங்களின் மீதும் விசுவாசம் இல்லாதவர்களாக இருந்தார்கள். சதுசேயர்கள் தேவாலயத்தை நிர்வகிக்கும் அதிகாரம் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் மீது விசுவாசம்

இல்லாமல், அவர்கள் வெறும் சடங்கு சார்ந்த மற்றும் உலகப்பிரகாரமான ஒரு குழுவாக மாறிப்போயிருந்தார்கள்.

மக்கபேயர் புரட்சிக்குப் பிறகு, சதுசேயர்கள் மிகவும் முக்கியமான அரசியல் ரீதியான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்கள். அதே சமயம், பரிசேயர்கள் மோசேயின் நியாயப்பிரமாணம் தொடர்பானசட்டம் மற்றும் மத ரீதியான பாத்திரங்களை வகித்தார்கள். (அல்லது அப்படிச் செய்வதாக உரிமை கோரினார்கள்) சதுசேயர்கள் உரோமையர்களுடன் இணைந்து செயல்பட்டதோடு அவர்களுடன் சமரசக் கொள்கையை கடைப்பிடித்தனர். இதுஅவர்கள் தங்கள அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள உதவியது. ஆனால் அவர்களின் ஆவிக்குரிய தன்மையைச் சீரழித்தது. கிறிஸ்தவர்களாகிய நாமும், கொள்கைகளை சார்ந்த விஷயங்களில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளக் கூடாது. அதேசமயம் விருப்பங்கள் சார்ந்த விஷயங்களில் மட்டுமே சமரசம் செய்யலாம் என்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கோட்பாடுகள் என்பது வேதத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி ஆதரிக்கப்படும் கோட்பாடுகள் அதாவது அனைவருக்கும் மீட்கும் பொருள், நித்திய வேதனை இல்லை மற்றும் மூக்கடவுள் இல்லை போன்ற கொள்கைகள் நமது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு கொள்கைகளாக அமைக்கப்பட்டுள்ளன. இதை பவுல் தேளிவாக விவரித்தார். இவைகள் பின்னர் விவாதிக்கப்படும். இதில் விருப்பங்களின் சில எடுத்துக்காட்டுகளில் தீர்க்கதரிசனத்தின் விளக்கம், கால வரிசை மற்றும்; கிறிஸ்துவின் ஆயிரமாண்ட இராஜ்யத்தின் செயல்பாட்டின் விவரங்கள் ஆகியவை அடங்கும்.

**ஏரோதின் புளித்தமா:**

மாற்கு 8:15வில் "நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்தும் ஏரோதின் புளித்தமாவைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்..." என்று இயேசு சீஷர்களுக்கு கற்பித்தார். சில பண்டைய அதிகாரிகள் ஏரோதுக்குப் பதிலாக ஏரோதியர்களைக் குறிப்பிடுகின்றனர். இதை அரசியல் செயல்பாடுகளுக்கு எதிரான எச்சரிக்கையாக விளக்கலாம். முன்னர் குறிப்பிடப்பட்ட தேவாலயத்தின் புளிப்புக்குப் பதிலாக அரசியல் புளிப்பாகும். ஓரினச்சேர்க்கை உரிமைகள், கருக்கலைப்பு, பொது இடங்களில் கிறிஸ்தவ அடையாளங்களை அகற்றுதல் அல்லது பொது மன்றத்தில் பிரார்த்தனையை கட்டுப்படுத்துதல் போன்ற பல தார் மீக காரணங்களை நாம் எதிர்த்து அரசியல் ரீதியாக செயல்பட முடியும். இந்த செயல்களில் ஈடுபடுவதற்கான சோதனையை நாம் எதிர்க்க வேண்டும். ஏனெனில் அது நம்மை மிக முக்கியமான ஆவிக்குரிய விஷயங்களிலிருந்து நம்மை திசை திருப்பிவிடும். அதாவது கிறிஸ்துவைப் போன்ற குணாதிசயமாக மாற்றப்படுவது நமது சபையிலும், சக சபைகளிலும் உள்ள சகோதரர்களை ஆதரிப்பது தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றி சாட்சி கொடுப்பது போன்றவற்றிலிருந்து நம்மை திசைத்திருப்பிவிடும். அடுத்ததாக, இந்த புளிப்பின் மற்றொரு அம்சம் ஏரோது தனது மனைவியை விவாகரத்து செய்து, தனது ஒன்றுவிட்ட சகோதரனின் மனைவியான ஏரோதியான மணந்தது ஒழுக்கக்கேடாக இருக்கலாம். கிறிஸ்தவர்களாகிய நாம வேதவசனங்களில் வரையறுக்கப்பட்ட ஒழுக்கக் கொள்கைகளை நிலைநிறுத்த வேண்டும், மற்றவர்களின் ஒழுக்கக்கேடான பழக்கவழக்கங்களை நிராகரிக்க வேண்டும்.

சதுசேயர் மற்றும் ஏரோதின் புளிப்பைப் பற்றி விவாதிக்கும்போது இயேசு பரிசேயர்களையும்



சேர்த்துக் கொண்டார். ஏன்? பரிசேயர்கள் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசிகளையும் நன்கு அறிந்திருந்ததால் இயேசுவையும் அவருடைய போதனைகளையும் ஏற்க மறுத்ததற்கு அவர்கள் அதிக பொறுப்புள்ளவர்களாக இருந்தனர். அதற்குப் பதிலாக அடையாளங்களைக் கேட்டு இயேசுவை அவமதிக்க அவர்கள் தொடர்ந்து முயன்றனர். சதுசேயர்களும், ஏரோதியர்களும் அதிக மதச்சார்ப்பற்றவர்களாக இருந்தனர், எனவே, அவர்கள் குறைவான குற்றவாளிகளாக இருந்தனர்.

**புளிப்பைத் தவிர்ப்பதன் அவசியம்:**

1கொரிந்தியர் 5:6-8 ல் சிறிது புளித்தமாவாக எவ்வாறு பிசைந்த மாவை முழுவதுமாகப் புளிப்பாக்குகிறது என்பதையும் எனவே பழைய புளிப்பை நாம் அகற்ற வேண்டும் என்பதையும் பவுல் பேசுகிறார். இந்தப் பழைய புளிப்பை அவர்

புளித்தமாவின் தீமையுடன் (மற்றும் துன்மார்க்கத்துடன்) வேறுபடுத்திக் காட்டுகிறார். 11ம் வசனத்தில், ஒழுக்கக்கேடு பேராசை, விக்கிரகாராதனை, அவதூறு அல்லது பழிவாங்குபவராக, குடிகாரராக அல்லது மோசடி செய்பவராக இருக்கும் ஒரு சகோரனுடன் ஐக்கியம் கொள்ள வேண்டாம் என்று அவர் நம்மை எச்சரிக்கிறார். கொலோசேயர் 3:5-ல் நாம் எதிர்க்க வேண்டியவற்றில் அசுத்தம், காமம் அல்லது இச்சை, தீய ஆசைகள் மற்றும் பேராசை ஆகியவற்றையும் அவர் சேர்க்கிறார். இவை கொரிந்து திருச்சபையில் சமகால பிரச்சனையாக இருந்தன. மேலும் பாவத்தை பொறுத்துக்கொள்வது மேலும் மேலும் பெரிய பாவங்களுக்கு வழிவகுக்கும் என்றும், இது இறுதியில் திருச்சபையை அழிக்கக்கூடும் என்றும் பவுல் எச்சரித்தார். பரலோக திருச்சபை அல்லது சிறு மந்தையின் ஒரு பகுதியாக இருப்பதைத் தடுக்கும் இந்த பாவப்பண்புகளை எதிர்க்க யுகம் முழுவதும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் பவுல் இந்தப் பாவங்களை பட்டியலிட்டார். நாம் நம் வாழ்க்கையிலிருந்து எல்லா புளிப்பையும் அல்லது பாவத்தையும் நீக்கி, இயேசு மற்றும் அவருடைய அப்போஸ்தலர்களின் முன் மாதிரிகளைப் பின்பற்றி, உண்மையிலும் துப்பரவிலும் புளிப்பில்லாதவர்களாக மாற வேண்டும்.

கிறிஸ்தவர்களாக இருந்தாலும் சரி, அவிசுவாசிகளாக இருந்தாலும் சரி, நண்பர்களாக இருந்தாலும் சரி, எதிரிகளாக இருந்தாலும் சரி, இவர்கள் மத்தியில் மரியாதையுடனும், அன்புடனும் நாம் தெய்வீக வாழ்க்கையை வாழ வேண்டும். “நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லை என்கிற மகிழச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள் என்று பவுல் பிலிப்பியர் 2:14-16ல் கூறுகிறார்.

உலகத்தில் உள்ளவர்களிடம் நாம் அப்படி நடந்து கொள்கிறோமா? தீமைக்குத் தீமை செய்கிறோமா, அல்லது மறு கன்னத்தைத் திருப்பிக் கொடுக்கிறோமா? சக ஊழியர்கள், அயலவர்கள் அறிமுகமானவர்கள் அல்லது சில சமயங்களில் குடும்பத்தினருடன் நாம் நடந்து கொள்ளும்போது தகாத வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோமா அல்லது கிறிஸ்தவ நியமங்களைப் பின்பற்ற முயற்சிப்பவர்களை மற்றவர்கள் கேலி செய்யும் போது அமைதியாக இருப்பதன் மூலமோ நாம் அவர்களுடன் ஒத்துப்போக முயற்சிக்கிறோமா? அல்லது கடவுளுடைய வார்த்தையின் கொள்கைகளில் நம் நம்பிக்கையைப் பாதுகாக்கிறோமா? இருப்பினும், வேண்டுமென்றே விரோதமாக இருப்பதன் மூலம் உலகத்தின் கோபத்தை வேண்டுமேன்றே தூண்டிவிடாமல் கவனமாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு நாம் அளிக்கும் பதில், பிலிப்பிய வசனங்களில் முன்னர் விவரிக்கப்பட்ட



கொள்கைகளுக்கு இசைவாக இருப்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.

**நமது விசுவாசித்தின் சோதனை:**

நமது குணநல வளர்ச்சியின் மற்றொரு அம்சம், நமது வாழ்நாள் முழுவதும் நாம் தாங்கும் சோதனைகள் மற்றும் கசப்பான அனுபவங்கள் நமது ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், கிறிஸ்துவைப் போல நம்மை வடிவமைக்கவும் கர்த்தரால் சோதனைகள் அனுமதிக்கப்படுகின்றன. அவை நாம் தேவைகளுக்கு ஏற்ப மாறுபடும். தாவீது இராஜா இவ்வாறு ஜெபித்தார். “தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்”. (சங்கீதம் 139:23-24) சோதனைகள் என்பது புற்றுநோய் போன்ற நீண்டகால நோயாகவோ அல்லது நினைவாற்றல் இழப்பு அல்லது உடல் ஊனத்தை ஏற்படுத்தி இறுதியில் மரணத்திற்கு வழிவகுக்கும் ஒரு நாள்பட்ட நோயாகவோ இருக்கலாம். உலகம், குடும்பம் அல்லது கிறிஸ்துவின் மீதான நமது விசுவாசத்திற்கு அனுதாபம் காட்டாத “நண்பர்களால்” கூட மனரீதியான சோதனைகள் ஏற்படலாம். நம் சக சகோதரர்களால் கூட நாம் சோதனைகளுக்கு ஆளாக நேரிடலாம். எதுவாக இருந்தாலும் நாம் அவர்களுக்கு அன்புடனும் புரிதலுடனும் பதிலளிக்க வேண்டும். மூல காரணத்தைக் கண்டறிய முயற்சித்து அந்த நபருடன் நம்பிக்கையுடன் சமரசம் செய்ய வேண்டும். “அது மாத்திரமல்ல உபத்திரவம் பொறுமையையும்

பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம்.'' (ரோமர் 5:3-4) என்று பவுல் நமக்கு நினைவூட்டுகிறார்.

இருப்பினும், நாம் சோதனைகளை வேதப்பூர்வ கொள்கைகளைப் பின்பற்றுவதிலிருந்து (''நீதியினிமித்தம் துன்புறுத்தப்படுதல்'') மனுக்குலத்திற்கு பொதுவானவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். அதாவது பொதுவான சோதனைகளுக்கும் நீதியினிமித்தம் வரும் சோதனைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக, நமக்கு ஒரு தற்காலிக நோய் ஏற்பட்டால் அது மதத் துன்புறுத்தல் அல்லது நாள்ப்பட்ட நோயின் சோதனையாக இல்லாமல், நமது பொறுமையின் குறுகிய கால சோதனையாக இருக்கலாம். நமது பொறுமையின் குறுகிய கால சோதனைகளுக்கு வேறு சில உதாரணங்கள் ஒரு கார் பழுதடைதல், வீட்டு உபகரணங்கள் பழுதடைதல், புயலின் போது மின்சாரம் துண்டிக்கப்படுதல் போன்றவையாக இருக்கலாம். இவை அன்றாட வாழ்வில் ஏற்படும் சோதனைகள்.

ஆரம்ப கால திருச்சபையில் பலர் எதிர்கொண்ட கடுமையான சரீர ரீதியான சோதனைகளின் சாத்தியக்கூறு குறித்து எதிர்காலத்தில் நமக்கு என்ன காத்திருக்கிறது என்பது நமக்கு தெரியாது. அது நடந்தால், அது கர்த்தருடைய கைகளில் உள்ளது. மேலும் நாம் என்ன தாங்க வேண்டியிருக்கும் என்பதை அறிந்து கொள்ள நமக்கு எந்த வழியும் இல்லை. இருப்பினும் 2தீமோத்தேயு 3:12-ல் பவுல் தீமோத்தேயுவிடம் கூறியது போல, ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாக நடக்க மனதுள்ளோர் அனைவரும் துன்பப்படுவார்கள்'' என்றும் மேலும் ''இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள் என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால் இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்'' என்று அப்போஸ்தலன் 1பேதுரு 1:6-7ல் இதை ஒப்புக்கொள்கிறார். நம்முடைய விசுவாசமே கடுமையான சோதனைகளின் போது சோதிக்கப்படுகிறது. ஏனென்றால் விசுவாசம் என்பது குணநலன்களை வளர்ப்பதற்கான அடித்தளமாகும்.

சில நேரங்களில் நாம் கடினமான அனுபவங்களை மீண்டும், மீண்டும் வருகின்றனவா அல்லது கர்த்தர் நமக்குக் கற்பிக்க விரும்பும் பாடத்தைக் கற்றுக் கொள்ளவில்லையா? ஒருவேளை இந்த அனுபவங்கள் நமது சொந்த நடத்தையின் விளைவாக இருந்தால் இந்த நடத்தையைச் சரிசெய்ய நாம் சுயபரிசோதனை செய்து கவனமாக பரிசீலிக்க வேண்டும். நமது அனுபவங்களையும் சோதனைகளையும் புரிந்துகொள்ள முயற்சிப்பது என்பது நம்மை கடவுளிடம் நெருங்கிச் சென்று அவரை உண்மையாகவே சார்ந்திருக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்.'' எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும் ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்'' என்று அப்போஸ்தலன் பவுல் எபிரெயர் 12:11ல் கூறினார்.

உலக அனுபவங்கள் நம்மை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு அம்சம். உலகத்தின் சலசலப்பில் சிக்கிக் கொள்வது எளிது. ஆனால் தங்கள் வாழ்க்கையை கடவுளுக்கு அர்ப்பணித்தவர்கள் உலகத்தின் செல்வாக்கை எதிர்க்க வேண்டும். உலகத்தின் ஆவி கடவுளின் ஆவிக்கு முரணானது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். 1யோவான் 2:15 இவ்வாறு கூறுகிறது. உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை மேலும் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்று உங்களுக்குத் தெரியாதா? என்று மேலும் யாக்கோபு 4:4 கூறுகிறது.

**நம்முடைய சோதனைகளின் நோக்கம்:**

கலாத்தியர் 5:22-23ல் அப்போஸ்தலன் பவுல் கிறிஸ்தவ குணத்தின் அத்தியாவசியங்களை கோடிட்டுக் காட்டுகிறார். ''ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. இப்படியிருக்க நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும் பொறுமையோடே தேவபக்தியையும் தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும் சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.'' (2பேதுரு 1:5-7)

கிறிஸ்துவின் சாயலை அடைவதற்கு உதவியாக கடவுள் நமக்கு அனுமதிக்கும் சோதனைகள் மற்றும் அனுபவங்கள் மூலம் நமது குணத்தை வடிவமைக்கிறார். ரோமர் 8:29-ல் கூறப்பட்டுள்ளபடி, இதுவே நமக்கான கடவுளின் குறிக்கோள், ''தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு அவர் முன்னறிந்தவர்களை அவருடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்.''

## இறுதிப் பாடங்கள்

## நம்முடைய கர்த்தரின் நினைவுகூருதல்



David Stein

"நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். " (யோவான் 17:20)

இந்த நினைவுருதலின் காலத்தின் போது இயேசுவின் மகத்தான தியாகத்தை நாம் நினைவுகூரும் வேளையில் நாம் நமக்குள்ளே ஆராய்ந்து பார்த்து அவருடைய அடிச்சுவடுகளில் முழுமையாக நடப்பதற்கு இன்னும் அதிக உறுதியுடன் இருப்போமாக. நம்மையும் நம்முடைய சொந்த நலன்களையும், தியாகம் செய்வதற்கு மீண்டும் அர்ப்பணித்து மற்றவர்களை ஆசீர்வதிப்பதில் நம் ஆற்றலைச் செலவிடுவோமாக.

நமது ஆண்டவரின் அனுபவங்களை நாம் சிந்திக்கும் வேளையில் இயேசுவின் வாழ்க்கையின் கடைசி இரவில் தம்முடைய சீஷர்களுக்கும் நமக்கும் அவர் கற்பிக்க விரும்பிய சில இறுதிப் பாடங்களைக் கருத்தில் கொள்வோம். அவை யோவான் 13 முதல் 17 வரையிலான அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வசனங்களை நாம் வாசிக்கும் போது அவற்றில் எத்தனை நம் சகோதரத்துவ உறவைப் பற்றியவை என்பதை நாம் கவனிக்க முடிகிறது.

**நீங்கள் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவக் கடனாளிகளாய் இருக்கிறீர்கள்:**

யோவான் 13ல் பின்னணியை அறிந்துகொள்ள, பஸ்காவுக்கு பின் உடனே சீடர்களுக்குள் தங்களில் யார் பெரியவர் என்ற விவாதம் உண்டானதாக லூக்கா 22:24ல் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. நம் ஆண்டவர், யோவான் 13:4ல் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி சீஷர்களின் கால்களைக் கழுவுவதன் மூலம் பதிலளித்தார். பின்பு ஒரு துணியால் அவற்றைத் துடைத்துவிட்டு இவ்வாறு கூறினார். "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்." (யோவான் 13:14)

நம்முடைய ஆண்டவர் நம்மில் யாரும் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று ஒருபோதும் உணரக்கூடாது என்பதை எவ்வளவு அழகாக விளக்கினார். மாறாக ஒவ்வொருவரும் மற்றவர்களுக்குத் தாழ்மையுடன் சேவை செய்ய வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம், அந்தத் தருணத்தில் எந்த ஒரு சாதரணமான பணி தேவைப்பட்டாலும் அதைச் செய்ய வேண்டும்.

**ஒரு புதிய கட்டளை:**

நம் ஆண்டவர் யோவான் 13:34,35ல் தொடர்ந்து கூறியதாவது: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள்



என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்ளவார்கள் என்றார்."

இதைச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை என்று தோன்றலாம். தங்கள் சகோதரர்களை நேசிக்க விரும்பாதவர் யார்? ஆனால் அதே இரவில் அவர் இதை இன்னும் இரண்டுமுறை மீண்டும் மீண்டும் கூறியிருப்பதால் சில நேரங்களில் இது ஒரு சவாலாக இருக்கலாம் என்பது தெளிவாகிறது. நம் சகோதரர்களை நேசிக்க வேண்டும் என்ற கட்டளையை ஆண்டவர் ஏன் மூன்று முறை மீண்டும் மீண்டும் கூறினார்?

சகோதரர்களை நேசிப்பது சில நேரங்களில் கடினமாக இருக்கலாம் என்பதை இயேசு அறிந்திருந்தார். நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு ஆளுமைகள் வெவ்வேறு பின்னணிகள் மற்றும் ஒருவேளை வெவ்வேறு கோட்பாட்டு புரிதல்களைக் கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும்

வெவ்வேறு ஆளுமைகள், வெவ்வேறு பின்னணிகள் மற்றும் ஒருவேளை வெவ்வேறு கோட்பாட்டு புரிதல்களைக் கொண்டிருக்கலாம். பல்வேறு விஷயங்களில் காரிய நிர்வாக கூட்டங்களில் கருத்து வேறுபாடுகள் எளிதாக எழலாம். ஆனாலும் இந்த வேறுபாடுகள் இருந்தபோதிலும் நாம் சகோதரர்கள் என்றும், அவருடைய சரீரத்தின் அங்கங்கள் என்றும் நம் ஆண்டவர் நமக்கு நினைவூட்டினார். நாம் ஒருவரை ஒருவர் தெரிந்துகொள்ளவில்லை. அவரே நம் சகோதரர்களைத் தெரிந்து கொண்டார். ஆகையால், நம் ஒரு குடும்பத்தை போலவே நாம் ஒருவருக்கொருவர் உண்மையான மரியாதையையும், அன்பையும் காட்ட வேண்டும் என்று அவர் நமக்கு நினைவூட்டுகிறார். நாம் சுய நலன்களை மட்டும் நாடாமல், நம் சகோதரர்களின் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஏப்ரல் 24-ஆம் தேதிக்கான "மன்னா" இதை மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது. "இராஜரீக ஆசாரியக் கூட்டத்தினரால்" அடிக்கடி அடையாளம் காணப்படாத ஒரு சேவை என்னவென்றால், நம்முடைய சொந்த வழிகளையோ திட்டங்களையோ, நம்முடைய சொந்த முறைகளையோ அல்லது விருப்பங்களையோ விட்டுக் கொடுப்பதற்கான வாய்ப்பாகும். அதற்குப் பதிலாக சமாதானத்தின் நிமித்தம், மற்றவர்களின் திட்டங்களையும் விருப்பங்களையும் ஏற்றுக்கொள்வதாகும். இது வெறும் தனிப்பட்ட விருப்பம் சார்ந்த விஷயமாக இருக்கும் போது மட்டுமே செயல்படுத்த முடியும்.

அந்த இரவில் சீஷர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை மட்டுமே நினைத்தார்கள். இயேசு அவர்களின் பாதங்களைக் கழுவி மென்மையாகக் கண்டித்தார். நாமும் அப்படியே ஒருவருக்கொருவர் பாதம் கழுவுவோமாக. நாம் இன்னும் மாம்சத்தில் இருக்கிறோம். அவ்வப்போது ஒருவருடன் ஒருவர் உறவில் விரிசல் ஏற்படலாம். யாராவது இத்தகைய சூழ்நிலையை அனுபவித்தால், நம் ஆண்டவரின் முன் மாதிரியை நினைவுகூருவோம். அடையாளப்பூர்வமாக நாம் அவர்களின் பாதங்களைக் கழுவுவோம். மேலும் அவர்கள் மீது நமக்கு இருக்கும் அன்பை பிதாவிடம் இருதயத்தில் வெளிப்படுத்துவோம்.

என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்:

யோவான் 14:1-3ல் நம் ஆண்டவர் நினைவுகூருதல் இரவு அறிவுரையைத் தொடர்ந்தார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக,தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்."

இறுதி விடை கொடுக்கும் இந்த வார்த்தைகளில், திரைக்கு அப்பால் நமக்கு முன் இருக்கும் நம்பிக்கையைப் பற்றி நாம் அடிக்கடி சிந்திக்க வேண்டிய தன் அவசியத்தை நம் ஆண்டவர் நமக்கு உணர்த்துகிறார். நம்முடைய சோதனைகள் அதிகரிக்கும்போது வயது முதிர்வால் நம் உடல் வலுவிழக்கத் தொடங்கும் போதும், நாம் துக்கத்தையும் இருதயத்தில் தனிமையையும் அனுபவிக்கும் போது நம்முடைய சோதனைகள் அனைத்தும் முடிந்துபோகும் காலத்தையும் நம் ஆண்டவர் நமக்காகத் தயார் செய்யச் சென்ற பிரபஞ்சத்திலுள்ள அந்த வீட்டின் மகிழ்ச்சியையும் ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிக்கப்போகும் காலத்தையும் பற்றி நம் மனதை நிலைநிறுத்த அவர் விரும்புகிறார்.

**என் சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்:**

நம் ஆண்டவர் யோவான் 14:27ல் தொடர்கிறார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயங்களில் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

நாம் அனுபவிக்கும் சோதனை, வலி அல்லது துக்கம் எதுவாக இருந்தாலும், பயப்படாமல் இருதயத்தில் அமைதியுடன் அதற்கு உடன்பட வேண்டம் என்று நம் ஆண்டவர் நமக்கு நினைவூட்டுகிறார். அவர் நம்முடைய நித்திய நன்மைக்காகவே இந்த அனுபவத்தை அனுமதிக்கிறார் என்பதை உணர்வதன் மூலம் இது ஒரு அமைதியைக் கொண்டு வரும்.





இந்தச் சோதனையான அனுபவங்கள் அனைத்தும் நம் குணநலன்களைப் பக்குவப்படுத்தவும் (Crystallize) அதிக கனிகளைக் கொடுக்க உதவவும் அனுமதிக்கப்படுகின்றன என்பதை இயேசு ஒரு உவமையின் மூலம் விளக்குகிறார். யோவான் 15:1, 2.பின்வருமாறு கூறுகிறது.'' நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்.'' நமக்கு எது சிறந்தது என்பதைத் துல்லியமாக அறிந்திருக்கும் நம் பிதாவின் அன்பான கர்த்தரால் இந்தச் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. 2கொரிந்தியர் 4:17-ல் கூறுவது போல ''மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. ''நம்முடைய சோதனைகள் பல கோடிகள் மதிப்புடையவை, அவற்றில் எதையும் நாம் வீணாக்கக்கூடாது.

யோவான் 17ஆம் அதிகாரத்தில் உள்ள ஜெபம்: யோவான் 17:1ல் உள்ள இயேசுவின் அழகான ஜெபத்துடன் தொடர்கிறோம்.



''நலன்களை மட்டும் நாடாமல், நம் சகோதரர்களின் தேவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஏப்ரல் 24-ஆம் தேதிக்கான ''மன்னா'' இதை மிக அழகாக எடுத்துக்காட்டுகிறது. ''இராஜரீக ஆசாரியக் கூட்டத்தினரால்'' அடிக்கடி அடையாளம் காணப்படாத ஒரு சேவை என்னவென்றால், நம்முடைய சொந்த வழிகளையோ திட்டங்களையோ, நம்முடைய சொந்த முறைகளையோ அல்லது விருப்பங்களையோ விட்டுக் கொடுப்பதற்கான வாய்ப்பாகும். அதற்குப் பதிலாக சமாதானத்தின் நிமித்தம், மற்றவர்களின் திட்டங்களையும் விருப்பங்களையும் ஏற்றுக்கொள்வதாகும். இது வெறும் தனிப்பட்ட விருப்பம் சார்ந்த விஷயமாக இருக்கும் போது மட்டுமே செயல்படுத்த முடியும்.

அந்த இரவில் சீஷர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை மட்டுமே நினைத்தார்கள். இயேசு அவர்களின் பாதங்களைக் கழுவி மென்மையாகக் கண்டித்தார். நாமும் அப்படியே ஒருவருக்கொருவர் பாதம் கழுவுவோமாக. நாம் இன்னும் மாம்சத்தில் இருக்கிறோம். அவ்வப்போது ஒருவருடன் ஒருவர் உறவில் விரிசல் ஏற்படலாம். யாராவது இத்தகைய சூழ்நிலையை அனுபவித்தால், நம் ஆண்டவரின் முன் மாதிரியை நினைவுகூருவோம். அடையாளப்பூர்வமாக நாம் அவர்களின் பாதங்களைக் கழுவுவோம். மேலும் அவர்கள் மீது நமக்கு இருக்கும் அன்பை பிதாவிடம் இருதயத்தில் வெளிப்படுத்துவோம்.

என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்:

யோவான் 14:1-3ல் நம் ஆண்டவர் நினைவுகூருதல் இரவு அறிவுரையைத் தொடர்ந்தார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக,தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை

உங்களுக் காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்.''

இறுதி விடை கொடுக்கும் இந்த வார்த்தைகளில், திரைக்கு அப்பால் நமக்கு முன் இருக்கும் நம்பிக்கையைப் பற்றி நாம் அடிக்கடி சிந்திக்க வேண்டிய தன் அவசியத்தை நம் ஆண்டவர் நமக்கு உணர்த்துகிறார். நம்முடைய சோதனைகள் அதிகரிக்கும்போது வயது முதிர்வால் நம் உடல் வலுவிழக்கத் தொடங்கும் போதும், நாம் துக்கத்தையும் இருதயத்தில் தனிமையையும் அனுபவிக்கும் போது நம்முடைய சோதனைகள் அனைத்தும் முடிந்துபோகும் காலத்தையும் நம் ஆண்டவர் நமக்காகத் தயார் செய்யச் சென்ற பிரபஞ்சத்திலுள்ள அந்த வீட்டின் மகிழ்ச்சியையும் ஆசீர்வாதங்களையும் நாம் அனுபவிக்கப்போகும் காலத்தையும் பற்றி நம் மனதை நிலைநிறுத்த அவர் விரும்புகிறார்.

**என் சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்:**

நம் ஆண்டவர் யோவான் 14:27ல் தொடர்கிறார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயங்களில் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

நாம் அனுபவிக்கும் சோதனை, வலி அல்லது துக்கம் எதுவாக இருந்தாலும், பயப்படாமல் இருதயத்தில் அமைதியுடன் அதற்கு உடன்பட வேண்டம் என்று நம் ஆண்டவர் நமக்கு நினைவூட்டுகிறார். அவர் நம்முடைய நித்திய நன்மைக்காகவே இந்த அனுபவத்தை அனுமதிக்கிறார் என்பதை உணர்வதன் மூலம் இது ஒரு அமைதியைக் கொண்டு வரும்.

இந்தச் சோதனையான அனுபவங்கள் அனைத்தும் நம் குணநலன்களைப் பக்குவப்படுத்தவும் (Crystallize) அதிக கனிகளைக் கொடுக்க உதவவும் அனுமதிக்கப்படுகின்றன என்பதை இயேசு ஒரு உவமையின் மூலம் விளக்குகிறார். யோவான் 15:1, 2.பின்வருமாறு கூறுகிறது.'' நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக கொடுக்கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார்.'' நமக்கு எது சிறந்தது என்பதைத் துல்லியமாக அறிந்திருக்கும் நம் பிதாவின் அன்பான கர்த்தரால் இந்தச் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. 2கொரிந்தியர் 4:17-ல் கூறுவது போல "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது. "நம்முடைய சோதனைகள் பல கோடிகள் மதிப்புடையவை, அவற்றில் எதையும் நாம் வீணாக்கக்கூடாது.

**யோவான் 17ஆம் அதிகாரத்தில் உள்ள ஜெபம்:**

யோவான் 17:1ல் உள்ள இயேசுவின் அழகான ஜெபத்துடன் தொடர்கிறோம். ''இயேசு இவைகளைச்சொன்ன பின்பு தம்முடைய கண்களை இயேசு இவைகளைச்சொன்ன பின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும் பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்''

மறுநாள் தான் மரிக்கப் போகிறோம் என்று நம் ஆண்டவர் அறிந்திருந்தார். ஆனாலும் தம்முடைய பரம பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே அவருடைய உள்ளத்தின் ஆழமான விருப்பமாக இருந்தது.

இயேசு ஜெபத்தைத் தொடரும் போது அவர் தம் பிதாவை எப்படி மகிமைப்படுத்தினார் என்பதை நாம் காண்கிறோம். வசனங்கள் 2 மற்றும் 3 "உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும் படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும். ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்.'' இயேசு சபைக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் போது தேவனும் மகிமைப்படுத்துவார். அது அவர்களுக்கு மட்டுமல்ல, இராஜ்யத்தில் நம் ஆண்டவரின் பூமிக்குரிய பிள்ளைகளாக மாறப்போகும் எண்ணற்ற பில்லியன் கணக்கான ஜனங்களுக்கும் பொருந்தும்.

அவர்கள் அனைவருக்கும் ஏன் நித்திய ஜீவன் கொடுக்கப்படும் என்பது குறித்த அழகான சிந்தனையை கவனியுங்கள். கிரேக்க மொழியின் கருத்து என்னவென்றால், அவர்கள் ஒரே மெய்யான தேவனாகிய உம்மை அறிந்துகொள்ளும் பொருட்டே அவர்களுக்கு நித்திய ஜீவன் அளிக்கப்படும் என்பதாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சபை மற்றும் மனுக்குலம் ஆகிய இருவருமே வரம்பிற்குட்பட்ட ஒரு ஜீவியாக, தேவனை அவருடைய முழுமையுடன் அறிந்துகொள்ள நித்திய காலம் எடுக்கும். ஏன்? ஏனென்றால் மற்ற படைப்புகளின் ஆசீர்வாதத்திற்காக என்றென்றும் விரிவடைந்து கொண்டே இருக்கும் ஒரு நித்திய திட்டத்தின் புதிய பரிமாணங்களை அவர் தொடர்ந்து வெளிப்படுத்துவார்.

இயேசுவின் ஜெபம் யோவான் 17:20,21ல் தொடர்கிறது. நான் இவர்களுக்காக வேண்டிக்

கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நம்முடைய சகோதரர்கள் ஒரே நோக்கத்துடனும், ஒரே சித்தத்துடனும், ஒருவரை ஒருவர் மதித்து, நேசித்து தேவன் நமக்குக் கொடுத்த வேலையில் தோளோடு தோள் சேர்ந்து ஊழியம் செய்ய வேண்டும் என்பதில் நம் ஆண்டவர் எவ்வளவு ஆழமாக விருப்பம் கொண்டிருக்கிறார் என்பதை நாம் காண்கிறோம்.

**கெத்சமனே தோட்டம்:**

சகோதரர்களின் ஒற்றுமைக்காக மேல் வீட்டில் ஜெபித்த பிறகு, இயேசுவும், சீஷர்களும் கெத்சமனே தோட்டதிற்குள் கெதரோன் ஆற்றைக் கடந்து சென்றனர். அங்கே, நம் ஆண்டவர் மரணத்திற்கேதுவான துக்கமடைந்து, தேவனுக்கு சித்தமானால் தம்முடைய பாத்திரத்தை நீங்கும்படி மூன்று முறை ஜெபித்தார். நம்முடைய ஆண்டவர் எந்த பாத்திரத்தை நீக்க வேண்டும் என்று விரும்பினார்?

சங்கீதம் 102ல் ஆண்டவரின் கெத்சமனே ஜெபம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அது அந்தப் பாத்திரம் என்னவாக இருந்திருக்கலாம் என்பதைப் பற்றிய ஒரு நுண்ணறிவை அளிக்கிறது. "கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும், என் கூப்பிடுதல் உம்மிடத்தில் சேர்வதாக. என் ஆபத்துநாளிலே உமது முகத்தை எனக்கு மறையாதேயும். உமது செவியை என்னிடத்தில் சாயும். நான் கூப்பிடுகிற நாளிலே எனக்குத் தீவிரமாய் உத்தரவு அருளிச்செய்யும். (சங்கீதம் 102:1,2)

கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது பிதா தம் பிரசன்னத்தை இயேசுவிடமிருந்து விலக்கத் தொடங்கினார் என்பதை இந்த வார்த்தைகள் உணர்த்துகின்றன. "உம்முடைய முகத்தை எனக்கு மறையாதேயும்" என்ற சொற்றொடர், உம்முடைய பிரசன்னத்தை எனக்கு மறையாதேயும் என்று பொருள்படும். தம்முடைய வாழ்க்கை முழுவதும், நம் ஆண்டவர் பிதாவின் பிரசன்னத்தை உணர முடிந்தது. ஆனால் தேவன் தம் பிரசன்னத்தை விலக்கியபோது ஏதோ ஒன்று மாறத் தொடங்கியது. லோகோஸாக இருந்தபோதோ அல்லது ஒரு மனிதனாக தம்முடைய முப்பத்து மூன்று ஆண்டுகளில் இருந்தபோது இயேசு இதற்கு முன் அனுபவித்திராத ஒன்று.

அது அவரை மூழ்கடித்தது! இயேசு பின் வாங்கினார். பிதா ஏன் இதைச் செய்தார்? நம் ஆண்டவர் எங்கேயாவது நியாயப்பிரமாணத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பதில் தவறிவிட்டாரா? ஏன் என்று தெரியாமல் இருப்பது தாங்க முடியாததாக இருந்தது. சங்கீதம் 102:24ல் என் தேவனே, பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும் உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலை முறையாக இருக்கும் என்று அவர் கூக்குரலிட்டார். இதன் மூலம் அவர் எதை பொருள்படுத்தினார்?

லோகோஸ் என்ற முறையில் இயேசு கடவுளின் முதல் சிருஷ்டிப்பு அவர் பில்லியன் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு தோன்றினார். சந்தேகத்திற்கு இடமின்றி நித்தியமாக வாழ்வதை எதிர்பார்த்தார். ஒரேவேளை, பாதி வயதில் என்னை எடுத்துக்கொள்ளாதேயும், என்று அவர் சொன்னபோது எப்படியாவது, அவர் நியாயப்பிரமாணத்தின் சில சிறிய பகுதிகளை கடைபிடிக்காமல் விட்டுவிட்டார் என்றும், அதனால் அவர் எதிர்பார்த்த நித்திய ஜீவன் நடுவில் துண்டிக்கப்படும் என்றும் அவர் பயந்திருக்கலாம்.

எபிரெயர் 5:7 (Diaglott) இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. "அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று விடுவிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு",

கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பில் "அவர் மரணத்திலிருந்து இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி என்று அழுததாக கூறுகிறது. ஆனால் இது கிரேக்கர்களின் சிந்தனை அல்ல. இயேசு மரணத்திலிருந்து காப்பாற்றப்பட விரும்பவில்லை. அனைத்து மனுக்குலத்திற்கும் மீட்கும பொருளாக அவர் மரிக்க வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். ஒருவேளை அவர் உயிர்த்தெழுப்பப்படமாட்டார் என்ற பயத்தில் அவர் அழுதார். இவ்வாறு உயிர்தெழுதல் மூலம் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர் அழுகையோடு கண்ணீரோடும் ஜெபித்தார். இது சங்கீதம் 102ல் கூட பரிந்துரைக்கப்படுகிறது. அவர் என்றென்றும் தண்டிக்கப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அவர் உண்மையுள்ளவராகவும், மீண்டும் உயிர் பெறுவார் என்றும் உறுதியளிக்க கடவுள் ஒரு தூதனை அனுப்பினார் என்று லூக்கா (22:43) நமக்கு தெரிவிக்கிறார். அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அந்த தருணத்திலிருந்து இயேசு உண்மையுள்ளவராக இருந்தார் என்பதை அவர் அறிந்துகொண்டார். அதன் பிறகு சிறிது நேரத்திலேயே இயேசுவின் மீதமுள்ள அனுபவங்கள் முழுவதிலும் அவர் முற்றிலுமாக அமைதியாக இருந்தார் என்பதை காண்கிறோம்.

**அவர் தம் வாயைத் திறக்கவில்லை:**

சிறைச்சாலையில் தள்ளப்பட்ட பிறகும், பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட பிறகும், விசாரிக்கப்பட்ட பிறகும், பரிகாசம் செய்யப்பட்டு தூஷிக்கப்பட்டு, துப்பப்பட்டு, தலையில் முள்முடி சூட்டப்பட்டு, கைகளிலும் கால்களிலும் ஆணிகளடித்துச் சிலுவையில் அறையப்பட்ட



பிறகும் அவர் தம்மை வெட்டுபவருக்கு முன்பாக வாய் திறவாமல் நிற்கும் ஆட்டைப்போல இருந்தார். அவர் தம் வாயைத் திறக்கவில்லை. சிலுவையில் இருந்தபோது, பிதாவின் பிரசன்னம் தொடர்ந்து விலகியிருக்கவே, நம் ஆண்டவர் என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று உரக்கக் கதறினார்.

இயேசு தன் இருதயத்திலிருந்து இப்படிக் கதறிய அந்தத் தருணத்திலேயே அவருடைய பூரணமான மனமும் நினைவாற்றலும் 22 ஆம் சங்கீதத்தை அசைபோட்டிருக்கலாம். அந்த சங்கீதம் 30 மற்றும் 31 ஆம் வசனங்களில் தீர்க்கதரிசனமாக இந்த உறுதியுடன் முடிகிறது. "ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும், தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும். அவர்கள் வந்து, அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப் போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள். அவர் இதைச் செய்து முடித்தார் ""(He hath done it ) என்பது "எல்லாம் நிறைவேறிற்று "(it is finished) என்ற அதே கருத்தை உணர்த்துகிறது.

சிலுவையில் அவருடைய இருதயத்தை உண்மையாகவே பிளந்துபோட அந்த உச்சகட்டமான சோதனையை அவர் சகித்தார். தேவனோடு இருந்த முழுமையான ஐக்கியத்தை விட்டு பிரிந்த நிலையை அவர் பெற்று அவர்களின் உச்சகட்டத் தண்டனையை சுமந்தார்.

நம்முடைய எஜமான் நமக்காக எவ்வளவு துன்பங்களைச் சகித்தார் என்பதை நாம் சிந்திக்கும் போது "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?" என்ற கேள்வியை நாமும் சிந்திப்போம்.

நம்முடைய அர்ப்பணிப்பின் ஒப்பந்தங்களை (Consecreation vows ) நினைவு கூர்ந்து அவருடைய சித்தம் எதை அனுமதித்தாலும் அதை எவ்வித புகாரும் இன்றி அவைகளை ஏற்றுக்கொண்டு இன்னும் அதிக உறுதியோடு அவருடைய அடிச்சுவடுகளில் நெருக்கமாக நடக்கத் தீர்மானிப்போம். அவருடைய ஊழியத்திற்கு நாம் ஜீவனையே அர்ப்பணிப்போம்! நம்முடைய ஆண்டவருக்கும், சத்தியத்திற்கும், சகோதரர்களுக்கும் ஊழியம் செய்வதில் நம்முடைய ஒவ்வொரு நுண்ணிய வல்லமைகளையும் பயன்படுத்துவோம்.

# Christ Within

A living Christ, of wondrous birth,
Who trod the dreary paths of earth,
Shedding abroad His holy light
Through the deep gloom of sin's dark night,

A dying Christ, whose precious blood
Seals the poor sinner's peace with God;
And fills the soul with fullest love,
Like to the joy prepared above.



A Christ ascended — all is done,
A world redeemed, a victory won.
With angel hosts, a glorious throng,
We'll sing with joy salvation's song.

A *living* Christ our spirits need,
A *loving* Christ our souls to feed;
A *dying* Christ, our ransom He,
A *risen* Christ to set us free.

This, too, our need — a Christ within,
A life with God, afar from sin,
A Christ whose love our hearts shall fill,
And quite subdue our wayward will.

*Poems of the Way*